1240

|| श्रीः ||

# A CRITIQUE ON SANDHYAVANDANAM.

28 FEB

## ஸந்தியாவந்தனவிமர்சம்

WITH A FOREWORD BY

M. R. Ry, R. SWAMINATHA AYYAR Avl., B.A., L.T.,
*RETIRED HEAD-MASTER, TOWN HIGH SCHOOL,*
KUMBAKONAM.

BY

M. RAMA RAO,
*ASSISTANT, TOWN HIGH SCHOOL,*
KUMBAKONAM.

AND AUTHOR OF "THE VEDAS–A REVELATION",
"A CATECHISM OF THREE RELIGIONS",
"LIFE AND WORKS OF SRI RAGHOOTTAMA TEERTHA" etc.,

SRI KOMALAMBA PRESS, KUMBAKONAM.

1929 [ Annas 4

Q2:414
M29
[8340]

॥ ஸ்ரீ: ॥

ஸமீரஸமய ஸீரீஸ் நம்பர் 3.

# ஸந்தியாவந்தன விமர்சம்.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்

தலைமை உபாத்தியாயராகவிருந்த

மகா-ா-ா-ஸ்ரீ R. ஸ்வாமிநாத அய்யர், B.A., L.T.,

அவர்கள் அருளிய முன்னுரையுடன் கூடியது.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்

உதவி உபாத்தியாயர், M. ராமராவ்,

(ஸமீர ஸமய ஸீரீஸ் நூல்களின் ஆசிரியர்)

எழுதியது.

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

காபிரைட்] 1929 [அணா 4

|| श्रीः ||

# FOREWORD.

*Sandhyavandanam* or the morning and the evening prayer, as it may be called, prescribed for the brahmins in their scriptures is none, too long nor too elaborate, while its potency for good is held to be enormous.

ऋषयो दीर्घसन्ध्यत्वादायुर्दीर्घमवाप्नुयुः ।
प्रज्ञां यशश्च कीर्तिञ्च ब्रह्मवर्चसमेव च ॥

so says Vyasa about it. Are not longevity, knowledge, glory, and spiritual pre-eminence among the things we value most? Is not our simple *Sandhyavandanam* credited with the power to yield these and more? Yet, how many of us attempt to perform it in the manner prescribed?

Mr. M. Rama Rao, the learned author of the following dissertation, orthodox brahmin as he is, has gone into the *raison d'etre* of the various items of *Sandhya* worship and given a clear, clever explanation of each of them. He has indeed laid the reading public under a deep debt of obligation by bringing out his valuable 'CRITIQUE'. It is bound to influence for good, people who may be sceptical about the efficacy of the *Sandhya* worship.

The good author will, I have no doubt, feel amply rewarded if his work commends itself to those for whom it is intended and I most sincerely wish him every success in his attempt at enlightenment. God speed him!

KUMBAKONAM,
15—1—29.

**R. SWAMINATHA AYYAR,**
*Retired Head-master, T.H.S.*

---

I herein record my heart-felt thanks to M.R.Ry. R.Swaminatha Ayyar Avl. B.A.,L.T., who, amidst his multifarious duties, has kindly and too readily furnished this booklet with a Foreword.

*M. Rama Rao,*

ஸ்ரீ 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃 ।

# ஸந்தியாவந்தனம்.

ஆரியர்களே! சுருதி ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட கர்மங்கள் பலவிருக்க ஸந்தியாவந்தனமென்னும் கர்மத்தைப் பற்றிஎழுத வேண்டிய காரணங்கள் பல உள. முதலாவதாக, இந்தக் கர்மமே எல்லாக் கர்மங்களுக்கும் அஸ்திவாரம் போன்றது. நாம் யாகம், வேதாத்யயனம் முதலிய மற்ற எந்த கர்மங்களைச் செய்யும் முன்னரும் ஸந்தியாவந்தனத்தைச் செய்தே அவைகளைத் துவக்க வேண்டும். அம்மாதிரி செய்யாவிடில் மகா அனர்த்தம் நேரிடும்.

योऽन्यत्र कुरुते यत्नं धर्मकार्ये द्विजोत्तमः ।
विहाय सन्ध्याप्रणतिं स याति नरकायुतम् ॥

𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌯𑌤𑍍𑌨𑌂 𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌵𑌿𑌹𑌾𑌯 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌣𑌤𑌿𑌂 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌰𑌕𑌾𑌯𑍁𑌤𑌮𑍍 ॥

அர்த்தம்— எந்த பிராமணசிரேஷ்டன் ஸந்தியாவந்தனத்தைச் செய்யாமல் விட்டு விட்டு வேறு தர்மகாரியங்களில் பிரவர்த்திக்கிருனே, அவன் ஆயிரக்கணக்கான நரகங்களை அடைகிருன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக,

परिहायापि वेदांस्त्रीन् साङ्गांश्च सपदक्रमान् ।
गायत्रीमात्रसारोऽपि वरो विप्रो न संशयः ॥

𑌪𑌰𑌿𑌹𑌾𑌯𑌾𑌪𑌿 𑌵𑍇𑌦𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌸𑌾𑌙𑍍𑌗𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌪𑌦𑌕𑍍𑌰𑌮𑌾𑌨𑍍 ।
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌾𑌰𑍋𑌽𑌪𑌿 𑌵𑌰𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

"சிக்ஷை, வியாகரணம், கல்பம், நிருக்தம், சந்தஸ், ஜோதிஷம்என்ற ஆறு அங்கங்களுடனும் பதம், கிரமம், கனம் முதலியவைகளுடனும் கூடின மூன்று வேதங்களையும் அத்யயனம் செய்யாமல் விட்டுவிடினும், காயத்ரீஜபரூபமான ஸந்தியாவந்தனத்தை மாத்திரம் செய்து வருவானுகில் அவன் சிறந்த பிராமணன் என்பதில் ஐயமில்லை" என்று வேதங்களை விட்டாலும் விடலாம், ஸந்தியாவந்தனத்தை விடக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பதால் ஸந்தியாவந்தனத்தின் மஹிமையைப்பாருங்கள்,

மூன்றுவதாக, அடியிற்கண்ட சரித்திரத்தாலும் ஸந்தியாவந்தனத்தின் மஹிமை நன்கு விளங்கும். கொஞ்சகாலத்திற்கு முன்னர் அனந்தசயனத்தில் காலபுருஷதானம் என்ற ஓர் தானம் அவ்வூர் அரசனுல் ஏற்படுத்தப்பட்டது. அதாவது கருப்புக்கம்பளியால் ஓர் புருஷ பிம்பம் செய்து அது நிறைய பவுன்களைக்கட்டி அதன் கையில் ஓர் கத்தியையும் கொடுத்து, அதில் யமதர்மராஜாவை ஆவாஹனம் செய்யப்பட்டது. அந்த ஏராளமான பவுன்களைப் பெறுவதற்கு விரும்புகிறவர்கள் அந்த பிம்பத்தை அடைந்து பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விளம்பரம் செய்தான். ஆவாஹனத்தின் சிறப்பினுலும், மந்திரத்தின் பிரபாவத்தாலும், கால புருஷனின் ஸாந்நித்யம் அந்த பிம்பத்தில் அதிகரித்து நின்றபடியால், பவுன் ஆசை கொண்டு அங்கு வரும் எந்த வேத சாஸ்திர பாரங்கதரான வித்வானையும் குறித்து அது மூன்று விரல்களைக் காட்டிற்று. பண்டிதர்களோ மூன்று விரலைக்காட்டும் பதுமையைப் பார்த்து அதன் பொருள் விளங்காதவர்களாய்ப் பயந்து ஓடி விட்டனர். வெகு காலம் கழிந்த பின்னர் யாதொரு படிப்பு இல்லாமலும் ஆனுல் தினந்தோறும் ஸந்தியாவந்தனத்தை மாத்திரம் ஒழுங்காகச் செய்துவந்த ஓர் பிராம்மணன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் 'மந்திரசக்தி தபோமஹிமையுள்ள பெரியோர்களே திண்டாடும்போது இவனுல் என்ன ஆகப்போகிறது' என்று ஜனங்கள் பரிஹஸித்தார்கள். அப்படியிருந்தாலும் அவன் தைர்யமாய் அந்தக்காலபுருஷனைத் தரிசித்தான். உடனே அது வழக்கம்போல் மூன்று விரல்களை உயரத்தூக்கியது. பிராமணன் அஞ்சாமல் ' அப்படிச் செய்யமுடியாது ' என்றுன். அந்த விக்ரஹம் இரண்டுவிரல்களைக் காட்டியது. அதற்கும் அவன் ' முடியாது ' என்று பதில் சொன்னுன். பிறகு கொஞ்சம் வருத்தத்துடன் ஒரு விரலை மெள்ளத் தூக்கிற்று. பிராமணனும் ' சரி கொடுத்துவிட்டேன் ' என்றுன். உடனே அது கத்தியைக்கீழே எறிந்துவிட்டு அந்தர்த்தானமடைந்தது. பிராமணனும் பவுன்களை வாரிக்கொண்டுபோனுன். *

இக்கதையால் நாம் அறியவேண்டியது யாது? அந்த உருவம் மூன்றுவிரல்களைக் காட்டியதின் அர்த்தம் என்னவென்றுல்,

---

* இந்தக்கதை கட்டுக்கதையல்ல. உண்மையாகவே நிகழ்ந்தது. நமது நேயர்களும் பெரியோர்கள்மூலமாய்க் கேட்டிருக்கலாம்.

காலம் தவறாமலும் சாஸ்திரோக்தமாயும் ஸந்தியாவந்தனத்தை மூன்றுவேளைகளிலும் செய்திருந்தால் அந்த மூன்றுவேளைசெய்த பலனையும் எனக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்பதே. அதற்கு அந்தப்பிராமணன் ஸம்மதிக்கவில்லை. ஆகையால் இரண்டு விரல்களைக்காட்டி இரண்டுவேளைப்பலனை யாசித்தது. அதற்கும் அவன் உடன்படவில்லை. கடைசியாக ஒருவேளைப் பலனையாவது கொடுத்துவிடும்படி ஒரு விரலைக் காட்டியது. அவனும் சம்மதித்து தன் ஸந்தியாவந்தனத்தின் ஒருவேளைப்பலனைக் கொடுத்துவிட்டுப் பவுன்களை அடைந்தான். இது நிற்க, அந்தக் காலபுருஷனின் உருவம், பவுன்களுக்குப்பதிலாக மற்ற யாதொன்றையும் கேட்காமல் ஸந்தியாவந்தனத்தின் பலனைக்கேட்டது பார்த்தீர்களா! இதனால் ஸந்தியாவந்தனம் சிறந்த கர்மமென்று விளங்குவதால் அதைப்பற்றி யாம் எழுதுவதும் நன்றே.

நான்காவதாக, நாம் கலியின்வலையில் சிக்காவண்ணம் நமது முன்னோர்கள் கலியின் கொடுமையைப்பற்றி பல்லாயிரம் வருஷங்களுக்குமுன்னரே தாங்கள் நேரில் கண்டதுபோல் ஞானதிருஷ்டியால் பாகவத துவாதசஸ்கந்தம் முதலிய நூல்களில் விஸ்தாரமாக விளக்கியிருக்கின்றனர். அப்படி எச்சரிக்கப்பட்டும் பலர் ஏமாந்துபோய் ஸ்னானம் ஸந்தியாவந்தனம் முதலிய நித்யகர்மங்களைச் செய்யாமல் விட்டுவிட்டதுமன்னியில், அவைகளைவிதிக்கும் சுருதிஸ்மிருதிகளையும் ஸ்மிருதிகர்த்தாக்களையும தற்கால நாகரீகத் தேற்சியினால் நிந்திக்கின்றனர். இது நிற்க, நமது சிறுவர்களின் சிரத்தை எவ்வாறு இருக்கிறதென்று பார்ப்போம். அவர்கள் உபநயனமாகும்போதே ஸந்தியாவந்தனத்தைப் புரோஹிதரிடம் ஒப்புவித்துவிடுகின்றனர். தகப்பனார் ‘ ஸந்தி செய்தாயா? ‘என்று கேட்டால், ‘ ஆம், அந்தக் குளத்தில் செய்துவிட்டேன் ’ என்பார்கள். தகப்பனார் ‘அடே! அந்தக் குளத்தில் ஜலம் இல்லையே எப்படி ஸந்தியாவந்தனம் செய்தாய்? ’ என்று மீண்டும் கேட்டால் ‘அங்கு ஜலம் இருந்ததென்று அண்டைவீட்டு ராமு சொன்னானே’ என்று பதில் கூறுகிறார்கள். நம் சிறுவர்களின் மனப்பான்மை இவ்வாறாகவிருக்கப்பெற்றோர்களின் சிரத்தையை விசாரிப்போம். உபநயனமானது முதல் தினந்தோறும் ஸந்தி செய்ய வேண்டுமென்று ஊக்கமுடைய சிறுவன் அதன் அநுஷ்டானவிஷயத்தில் ஏதாவதொரு ஸந்தேஹத்தைப் பரிஹரிக்குமாறு வேண்டினால்,

தகப்பனார், 'அடே! நேற்று உபநயனமான உனக்கே மறந்து போனால் உபநயனமாகி எத்தனையோ யுகங்களைக்கழித்த எனக்கு எப்படி ஞாபகமிருக்கும்? உன் வாத்தியாரைக் கேள்' என்று அதிகாரம் செய்கிறார்.

மற்றும் சிலர் இக்காலத்தில் பலவித உத்யோகங்களில் அமர்ந்திருப்பதால் ஸந்தியாவந்தனத்திற்கு அவகாசமில்லை என்றும், இன்னும் பல சோம்பேரித்தனமான காரணங்களையும் சொல்லி ஸந்தியாவந்தன விஷயமாகப்பல குதர்க்கங்களைச்செய்து வருவதால், அவைகளையும் அவைகளுக்கு உசிதமானபதில்களையும் எம்சிற்றறிவுக்கேற்றபடி எழுதவே இவ்விஷயமாகப் ப்ரவர்த்தித்தது

ஸந்தியாவந்தனம் என்றால் என்ன ?

उपास्तिः सन्धौ सूर्यस्य निशायां दिवसस्य च ।
तामेव सन्ध्यां तस्मात्तु प्रवदन्ति महर्षयः ॥

𑌉𑌪𑌾𑌸𑍍𑌤𑌿𑌃 𑌸𑌨𑍍𑌧𑍌 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌶𑌾𑌯𑌾𑌂 𑌦𑌿𑌵𑌸𑌸𑍍𑌯 𑌚 ।
𑌤𑌾𑌮𑍇𑌵 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ॥

பகலும் இரவும் ஸந்திக்கும் காலம் ஸந்தியாகாலம் எனப்படும். இக்காலம் ஒவ்வொருநாளிலும் காலையிலும் மாலையிலும் ஸம்பவிக்கிறது. அதாவது காலையில் நக்ஷத்திரங்கள் மறைவதற்கு ஆரம்பிக்கும்முதல் சூரியன் உதயமாகும்வரையிலும், மாலையில் சூரியன் பாதி மறைந்து நக்ஷத்திரங்கள் காணப்படும்வரையிலும், இரண்டு ஸந்தியாகாலங்களாகும். இப்பேர்ப்பட்ட காலங்களில் சூரியாந்தர்க்கத பகவானைக்குறித்து சாஸ்திரங்களில் கூறப்பட்ட விதியையனுஸரித்துச் செய்யப்படும் ஸ்தோத்திரம், நமஸ்காரம் முதலிய கர்மாக்களுக்கு ஸந்தியாவந்தனம் என்று பெயர்.

वदि अभिवादनस्तुत्योः । 𑌵𑌦𑌿 𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑍋𑌃 ।

என்ற தாதுபாடத்தைக் கவனிக்க.

सन्धीयते सम्पदा यजमानः अनया इति सन्ध्या ।

𑌸𑌨𑍍𑌧𑍀𑌯𑌤𑍇 𑌸𑌮𑍍𑌪𑌦𑌾 𑌯𑌜𑌮𑌾𑌨𑌃 𑌅𑌨𑌯𑌾 𑌇𑌤𑌿 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 ॥

என்ற விக்ரஹத்தாலும் இச்சந்தியாவந்தனம் செய்துவருவதால் ஸகல ஐஹிக ஆமுஷ்மிக ஐசுவர்யங்களும் உண்டாகின்றன என்று விளங்குகிறது.

**ஸந்தியாவந்தனத்தை என் அனுஷ்டிக்க வேண்டும்?**

அனேக சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருப்பதாலும் சுருதிஸ்மிருதிகள் பகவானின் ஆக்ஞாரூபமானவையாதலாலும் அவசியம் செய்யவேண்டும். அச்சுருதிஸ்மிருதிகள் யாவை எனின் அவைகளை இங்கு உதாஹரிப்போம்.

1. प्रातरुत्थाय सन्ध्यामुपासीत। यत्सन्ध्यामुपासते ब्रह्मैव तदुपासते ।

𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤 । 𑌯𑌤𑍍𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾
𑌸𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

காலையில் எழுந்து ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும். ஸந்தியாவந்தனத்தைச் செய்வதானது நன்றாகத் தியானம் செய்யப்படுவதற்கு யோக்யனை பகவானையுபாஸித்தலேயாகும.

2. अहरहः सन्ध्यामुपासीत । 𑌅𑌹𑌰𑌹𑌃 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤 ।

பிரதிதினமும் ஸந்தியாவந்தனத்தையுபாஸிக்கவேண்டும்.

3. उद्यन्तमस्तं यन्तमादित्यमभिध्यायन्कुर्वन्ब्राह्मणो विद्वान्सकलं भद्रमश्नुते

𑌉𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑌂 𑌯𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮
𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌸𑌕𑌲𑌂 𑌭𑌦𑍍𑌰𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ।

சூரியன் உதிக்கும் ஸமயத்திலும் அஸ்தமிக்கும்ஸமயத்திலும் சூரியாந்தர்கதபகவானைத் தியானிக்கும் பிராமணன் ஞானத்தைப் பெற்று எல்லாவித மங்களங்களையும் அடைகிறான். (தைத்திரீய பிராம்மணம்)

4. तस्माद्ब्राह्मणोऽहोरात्रसंयोगे सन्ध्यामुपास्ते स ज्योतिषोज्योतिषोदर्शनात्

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑌂𑌯𑍋𑌗𑍇 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾
𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍋 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।

5. मौञ्जीबन्धनमारभ्य सायंप्रातश्च कालयोः ।
माध्याह्नेऽपि च कर्तव्यं यावत्प्राणविमोक्षणम् ।

𑌮𑍌𑌞𑍍𑌜𑍀𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌸𑌾𑌯𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑌯𑍋𑌃 ।
𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑍇𑌽𑌪𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

உபநயனம் ஆனதுமுதல் (பிராணவியோகம்) இறக்கும்வரையிலும் பிரதிதினம் காலையிலும், மத்தியானத்திலும், மாலையிலும் ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும்

6. स्नानमब्दैवतैर्मन्त्रैः मार्जनं प्राणसंयमः ।
सूर्यस्य चाप्युपस्थानं गायत्र्याः प्रत्यहं जपः ॥

𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌬𑍍𑌦𑍈𑌵𑌤𑍈𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑌂𑌯𑌮𑌃 ।
𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌜𑌪𑌃 ॥

ஒவ்வொருநாளும் ஜலாபிமானி தேவதாவாசகமான மந்திரங்களால் மார்ஜனத்தையும், பிராணுயாமத்தையும், சூரியனைக் குறித்து உபஸ்தானத்தையும், காயத்ரீஜபத்தையும் செய்யவேண்டும். (யாக்ஞவல்க்யஸ்மிருதி, ஆசாரகாண்டம்) இன்னும் பலசுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் இவ்விதமேவிதிக்கப்பட்டிருக்கிறது.

சங்கை:— சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கும் சில கர்மாக்களை நாம் செய்யாமலிருப்பதுபோல் ஸந்தியாவந்தனத்தையும் என் செய்யாமல் இருக்கக்கூடாது ?

ஸமாதானம்:— சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கும் கர்மங்கள் நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று விதங்களாகும். எப்பொழுதும் செய்தே தீரவேண்டும் என்று விதிக்கப்பட்ட அக்னிஹோத்திரம் முதலிய கர்மங்கள் நித்யமானவை. சந்திரக்ரஹணம், சூரியக்ரஹணம் முதலிய புண்ய காலங்களின் நிமித்தம் செய்யப்படும் தானம், ஸ்னுனம் முதலிய கர்மங்கள் நைமித்திகமானவை. மழை, ஸம்பத்து முதலிய ஐஹிகப் பலன்களையுத்தேசித்துச் செய்யப்படும் காரீரியாகம், புத்ரகாமேஷ்டி முதலிய கர்மங்கள் காம்யமானவை. இவைகளினிடையே நித்யகர்மம் என்பதைமாத்திரம் செய்யாமல் விட்டுவிடமுடியாது ஏனென்றுல் அதைச் செய்யாவிடில் பல அனர்த்தங்கள் ஸம்பவிக்கும். பிரகிருதமான ஸந்தியாவந்தனம் என்னும் கர்மமானது நித்யகர்மமானதால் மற்ற கர்மங்களை இழந்துவிட்டாலும் இதைச் செய்தே தீரவேண்டும்.

ஸந்தியாவந்தனம் செய்யாவிட்டால் என்ன அனர்த்தம் நேரிடும்?

1. नातिष्ठति तु यः पूर्वां नोपास्ते यश्च पश्चिमाम् ।
स शूद्रवद्बहिष्कार्यः सर्वस्माद्द्विजकर्मणः ॥

𑌨𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌤𑍁 𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌂 𑌨𑍋𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌯𑌶𑍍𑌚 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌾𑌮𑍍 ।
𑌸 𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑌦𑍍𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ॥

எவன் காலையிலும் மாலையிலும் ஸந்தியாவந்தனம் செய்கிறதில்லையோ, அவன் பிராமணனுக்கு விதிக்கப்பட்டிருக்கும் எல்லா நற்காரியங்களைச்செய்ய சூத்திரன்போல் அனதிகாரியாகிறான். (ஸர்வகர்மபஹிஷ்கிருதன்) மநுஸ்மிருதி.

2. सन्ध्याहीनोऽशुचिर्नित्यं अनर्हः सर्वकर्मसु ।
यदन्यत्कुरुते कर्म न तस्य फलभाग्भवेत् ॥

𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌅𑌨𑌰𑍍𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।
𑌯𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌫𑌲𑌭𑌾𑌗𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

ஸந்தியாவந்தனத்தைச் செய்யாதவன் அசுத்தனாகிறபடியால் எல்லாக் கர்மங்களைச்செய்ய அயோக்யனாகிறான். அவன் செய்யும் எந்த தர்மகார்யமும் பலனைத்தராது. (தக்ஷஸ்மிருதி)

3. योऽन्यत्र कुरुते यत्नं धर्मकार्ये द्विजोत्तमः ।
विहाय सन्ध्याप्रणतिं स याति नरकायुतम् ॥

𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌯𑌤𑍍𑌨𑌂 𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌵𑌿𑌹𑌾𑌯 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌣𑌤𑌿𑌂 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌰𑌕𑌾𑌯𑍁𑌤𑌮𑍍 ॥

ஒருவன் பிராம்மணசிரேஷ்டனாயினும் ஸந்தியாவந்தனத்தைமாத்திரம் செய்யாமல் வேறு எந்த தர்மகார்யத்தைச்செய்தபோதிலும் ஆயிரக்கணக்கான நாகங்களை அடைகிறான். கூர்மபுராணவசனம்.

4. अन्यकर्मफलं नास्ति सन्ध्याहीनेऽशुचित्वतः ।
जीवमानो भवेच्छूद्रः मृतः श्वा जायते ध्रुवम् ॥

𑌅𑌨𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍇𑌽𑌶𑍁𑌚𑌿𑌤𑍍𑌵𑌤𑌃 ।
𑌜𑍀𑌵𑌮𑌾𑌨𑍋 𑌭𑌵𑍇𑌚𑍍𑌛𑍂𑌦𑍍𑌰𑌃 𑌮𑍃𑌤𑌃 𑌶𑍍𑌵𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥

ஸந்தியாவந்தனத்தைச் செய்யாதவன் பரிசுத்தமில்லாதவனாகையால் அவன் செய்யும் மற்ற தர்மகாரியத்திற்குப் பலனில்லை. அப்பேர்ப்பட்டவன் ஜீவித்திருக்கும்வரையில் சூத்திரன்போல் வேதோக்தஸர்வகர்மபஹிஷ்கிருதனாகுவதல்லாமல் இறந்தவுடன் மறுஜன்மத்தில் நாயாகப்பிறப்பான், நிச்சயம். (தர்மஸிந்து)

5. यः सन्ध्यां कालतः प्राप्तां अकस्मादतिवर्तते ।
सूर्यहत्यामवाप्नोति उलूकत्वामयात्सदा ॥

**யஃ ஸந்த்யாம் காலத: ப்ராப்தாம் ஆலஸ்யாததிவர்த்ததே ।**
**ஸ ஸூர்யஹத்யாமவாப்நோதி உலூகத்வஞ்ச யாஸ்யதி ॥**

எவனொருவன் ஸந்தியாவந்தனத்தைக்குறித்தகாலத்தில் யாதிருச்சிகமாயினும் செய்யாமல் இருந்துவிடுகிறானோ, அவன் ஸூரியனைக்கொன்ற பாபத்தை அடைகிறான். மேலும் கோட்டானின் பிறப்பை அடைவான். (அக்னிபுராணம்)

சங்கை:—

ஸந்தியாவந்தனம் செய்யாவிடில் சூரியனைக்கொன்ற பாபம் வரும் என்பது எப்படிப் பொருந்தும் ? சூரியனோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறான். நம்முடைய கைக்கு எட்டினாலல்லவோ கொல்லலாம். கொன்றாலல்லவோ பாபம் அப்படித்தான் கைக்கு எட்டினதாக வைத்துக்கொள்வோம் அவனை நம்மால் கொல்ல முடியுமா ?

ஸமாதானம்:—

ஒருவனை கொல்வதென்றால் கத்தியினால் அவன் தலையை வெட்டுதல் என்று மாத்திரம் அர்த்தமல்ல ஒருவன் ஆயிரக்கணக்கான சத்துருக்களின் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கையில் நாம் அவனை அவர்களிடமிருந்து காப்பாற்றாமல் இருப்பதால் அவனுக்கு மரணம் ஏற்பட்டால் அவனை நாம் கொன்றதுபோலவே ஆகும். இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்குவோம். ஒரு அரசனுக்கு துஷ்டர்களை நிக்ரஹம் செய்து தன் குடிகளைக் காப்பாற்றுவது சிறந்த கடமையாகும். அக்குடிகளை ஹிம்ஸிக்கும் துஷ்டர்களைத் தண்டியாமல் அத்துஷ்டர்களால் அக்குடிகளுக்கு உபத்திரவம் ஏற்பட்டால் அது ராஜாவால் தான் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறதல்லவா ! அம்மாதிரியே இங்கு சூரியனைக்கொல்வதென்றால் அவனைக் கத்தியால் வெட்டுவது என்று அர்த்தமல்ல. அப்படியாயின் மேற்சொன்ன சங்கை பொருந்தும். ஆனால் மந்தேஹாள் என்ற கோரமான ராக்ஷஸர்களால் ஸந்தியாகாலங்களில் பீடிக்கப்படும் சூரியனை நம்முடைய சந்தியாவந்தனத்தின் ஓர் பாகமாகிய அர்க்கியத்தால் அவ்வரக்கர்களைத்தாக்கி மீட்காமல் இருப்போமாகில் நாம் சூரியனைக் கொன்றவர்கள் தாம் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. இவ்விஷயத்தை அர்க்யப்ரதானப் என்பதைப்பற்றி எழுதும் போது விஸ்தாரமாக ஆராய்வோம்.

மேலும் இச்சந்தியாவந்தனத்தை முற்காலத்தில் பெரியோர்க ளாகிய நமது முன்னோர்களும் ரிஷிகளும்தேவதைகளும் பிரும்மா விஷ்ணு மஹேசுவார் என்று கூறப்பட்ட மும்மூர்த்திகளும் கூட செய்துகொண்டே வந்திருக்கிறபடியால் நாம் அனுஷ்டிக்கவேண் டும் என்பதையும் சொல்லவும் வேண்டுமா?

ब्रह्मणोपासिता सन्ध्या विष्णुना शङ्करेण च ।
कस्तां नोपासयेद्देवीं सिद्धिकामो द्विजोत्तमः ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌪𑌾𑌸𑌿𑌤𑌾 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌶𑌙𑍍𑌕𑌰𑍇𑌣 𑌚 ।
𑌕𑌸𑍍𑌤𑌾𑌂 𑌨𑍋𑌪𑌾𑌸𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌕𑌾𑌮𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥

ஸந்தியாவந்தனமானது உலகத்திற்கே ஈசுவார்களான பிரும்மா விஷ்ணு மகேசுவான் முதலியவர்களால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கி றது. இப்படியிருக்கையில் எந்த ப்ராம்மண ச்ரேஷ்டன் அதை உபாஸிக்காமல் இருப்பான்?

२. अथाप्लुतोऽम्भस्यमले यथाविधि क्रियाकलापं परिधाय वाससी ।
चकार सन्ध्योपगमादि सत्तमः हुतानलो ब्रह्म जजाप वाग्यतः ॥

उपस्थायार्कमुद्यन्तं तर्पयित्वात्मनः कलाः ।
देवानृषीन् पितॄन्वृद्धान् विप्रानभ्यर्च्य चात्मवान् ॥

𑌅𑌥𑌾𑌪𑍍𑌲𑍁𑌤𑍋𑌽𑌮𑍍𑌭𑌸𑍍𑌯𑌮𑌲𑍇 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌕𑌲𑌾𑌪𑌂 𑌪𑌰𑌿𑌧𑌾𑌯 𑌵𑌾𑌸𑌸𑍀 । 𑌚𑌕𑌾𑌰 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍋𑌪𑌗𑌮𑌾𑌦𑌿 𑌸𑌤𑍍𑌤𑌮𑌃 𑌹𑍁𑌤𑌾𑌨𑌲𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌜𑌜𑌾𑌪 𑌵𑌾𑌗𑍍𑌯𑌤𑌃 ॥

𑌉𑌪𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌰𑍍𑌕𑌮𑍁𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌤𑌰𑍍𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌕𑌲𑌾𑌃 ।
𑌦𑍇𑌵𑌾𑌨𑍃𑌷𑍀𑌨𑍍 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ॥

சுருதிஸ்மிருதிகளில் கூறப்பட்ட கர்மங்களை ஒவ்வொருவரும் அநுஷ்டிக்கவேண்டும் என்ற தர்மத்தை நடத்திக்காட்ட அவதார மெடுத்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் "சுத்தமான ஜலத்தில் ஸ்னானம் செய்து வஸ்திரங்களையுடுத்திக்கொண்டு ஸந்தியோபாஸனம் முத லிய கர்மங்களை விதிப்படி செய்தார். பின்னும் ஸாதுக்களிற் சிறந்த ஸ்ரீ கிருஷ்ணன் அக்னிகாரியத்தைச்செய்து காயத்ரீயை ஜபித்தார், பிறகு ஸூரியன் உதயமானவுடன் உபஸ்தானத்தைக்

செய்து தம்முடைய அம்சமான தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பித்ருக்களுக்கும் தர்ப்பணம்செய்து பெரியோர்களான பிராம் மணர்களைப் பூஜித்தான்" என்ற பாகவதம் தசமஸ்கந்தவசனத் தினல் ஸ்ரீ கிருஷ்ணபகவானும் ஸந்தியாவந்தனத்தைச் செய்தி ருக்கிறார்.

3. பாண்டவர்கள் முதலியோரும் குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தத்தில்கூட போர்முனையில் நின்றுகொண்டே ஸந்தியா வந்தனத்தை அநுஷ்டித்திருப்பதை ஸ்ரீமன் மகாபாரதத்திலிருந்து அறியலாம்.

4. ऋषयो दीर्घसन्ध्यत्वादायुर्दीर्घमवाप्नुयुः ।
प्रज्ञां यशश्च कीर्तिं च ब्रह्मवर्चसमेव च ॥

ருஷயோ தீர்கஸந்த்யத்வாதாயுர்தீர்கமவாப்நுயு: ।
ப்ரஜ்ஞாம் யசஶ்ச கீர்த்திம் ச ப்ரஹ்மவர்ச்சஸமேவ ச ॥

முற்காலத்தில் ரிஷிகள் வெகுகாலம் ஸந்தியாவந்தனத்தை அனுஷ் டித்ததின்பயனாக நீண்ட ஆயுளையும், சுத்தமான ஞானத்தையும், கீர்த்தியையும், பிரம்மவர்ச்சஸ் என்ற தேககாந்தியையும் படைத் திருந்தனர். மித்திரர்களே! விசுவாமித்திரர், ச்யவனர் முதலிய பல ரிஷிகள் ஆயிரக்கணக்கான வருஷங்கள் தபஸ் செய்துகொண் டிருந்தனர் என்றும் அக்காலங்களில் அவர்களின் சரீரமானது புத்தினாலும், திருணங்களாலும், மூங்கில்களாலும் மூடப்பட்டும் எரும்புகள் ஸஞ்சரித்து அவர்களின் மேதஸ், மாம்ஸம், தோல், இரக்தம் முதலியவைகள் புஜிக்கப்பட்டும் இருந்ததென்று இதி ஹாஸங்கள்மூலமாய்க் கேள்வியுற்றிருக்கிறீர்கள் அல்லவா? அவர்கள் தபஸ்செய்த காலமே ஆயிரக்கணக்கான வருஷங்கள் எனின் அவர்களின் ஆயுஷ்பிரமாணத்தை நீங்களே ஆராய்ந்தறி யுங்கள். அவர்கள் மஹாஞானிகளாகையால் ஸந்தியாவந்தனத் தின் மகிமையை அறிந்து அதையனுஷ்டித்து வெகுகாலம் ஜீவித் திருந்தனர். நாமோ அதன் மகிமையை எள்ளளவுகூட அறியா மல் அனுஷ்டானம் செய்யாமலிருப்பதால் அற்பாயுள் உடையவர் களாயும் பலவித நூதனமான வியாதிகளுக்கு அதிதிகளாயும் இருந்துவருகிறோம்.

இன்னும் இதற்குமுன் அரசாங்கங்களில் மந்திரி முதலிய மிகவும் பொறுப்புள்ள உத்யோகங்களை வஹித்துவந்த பெரியோர்களும் தங்களுடைய வைதிக கர்மாக்களைக் கொஞ்சமும் தவறாது நடத்தி உத்தியோகப் பொறுப்பையும் செவ்வனே நடத்திவந்தார்கள் என்ற விஷயத்தைத் தற்காலம் உத்யோகத்தில் அமர்ந்திருப்பதால் ஸந்தியாவந்தனத்திற்கு அவகாசமில்லை என்று குறை கூறும் நேயர்கள் மறந்துவிட்டனர்போலும்,

5. ஸந்தியாவந்தனத்தைச்செய்ய மற்றுமோர் காரணமும் உண்டு. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்பொழுதே தேவரிணம், பித்ருரிணம், ரிஷிரிணம் என்ற மூன்று கடன்களுடனே பிறக்கிறான். யக்ஞம் முதலிய கர்மாக்களால் தேவர்களின் கடனையும் புத்ரோத்பத்தியால் பித்ருக்களின் கடனையும், அத்யயனத்தினால் ரிஷிகளின் கடனையும் பரிஹரித்துக்கொள்ளவேண்டும். ஆகவே தேவரிணபரிஹாரத்தின்பொருட்டு செய்யப்படும் யக்ஞம்முதலிய கர்மங்களுக்கு அங்கபூதமான ஸந்தியாவந்தனத்தைச் செய்யாவிடில் கடனிலிருந்து நாம் விடுபடுவதில்லை.

ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत् ।
अनपाकृत्य मोक्षं तु सेवमानः पतत्यधः ॥

𑌋𑌣𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑍍𑌯𑌪𑌾𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌨𑌪𑌾𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌸𑍇𑌵𑌮𑌾𑌨𑌃 𑌪𑌤𑌤𑍍𑌯𑌧𑌃 ।

'மூன்று கடன்களையும் போக்கிக்கொள்ளாமல் மோக்ஷத்தை விரும்புகிறவன் அதோகதியடைகிறான்' என்ற வசனத்தின்படி மஹா அனர்த்தமும் விளையும், அதனாலும் ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும்.

சங்கை:— தேவதைகளிடமிருந்து நாம் என்றாகிலும் பணத்தைக் கடன்வாங்கியிருந்தால் நாம் கடனாளியாகவே பிறப்போம். நாம் அம்மாதிரி ஒருபோதும் கடன்வாங்கவில்லையே! இப்படியிருக்க ஒவ்வொருவனும் கடனுடனே பிறக்கிறான் என்பது யுக்தமா ?

ஸமாதானம்:— பணத்தைக் கடன்வாங்கினால்தான் கடனாளி என்று அர்த்தமல்ல. உலகத்தில் ஒருவன் மற்றொருவனால் ஏதாவதொரு உபகாரத்தைப் பெற்றிருந்து அவ்வுபகாரத்திற்குப்

பிரத்யுபகாரம் இவன் செய்யாதவரையில் இவன் கடனாளியாகவே கருதப்படுகின்றான் என்பதும் எல்லாரும் அறிந்த விஷயமே. பிரகிருதம் நாம் சூரியன் முதலிய தேவதைகளிடமிருந்து உஷ்ணம், மழை முதலிய எண்ணிறந்த உபகாரங்களை அடைகிறோம். நமக்கு அன்னபானாதிகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் சூரிய வெளிச்சம். சூரியவெளிச்சத்திலுள்ள Electrical Fluid ஓர் மின்சார சக்தியானது நம் தேகங்களில் பிரவேசித்து வியாதிகளைக் கண்டித்து சுகத்தைப் பெருக்குகின்றது. இன்னும் பூகோளம் மூலமாய் சூரிய வெளிச்சம் இல்லாத பிரதேசங்கள் வாஸயோக்கியமற்றவையாயும், வியாதிகளுக்கு இருப்பிடமாயுமுள்ளவை என்று அறியலாம். பின்னும் சூரிய வெளிச்சத்தாலுண்டாகும் பல நன்மைகளை நாம் இங்கு விஸ்தரிக்க அவகாசமில்லை. இம்மாதிரியான பல உபகாரங்களை சூரியன்போன்ற தேவர்களிடமிருந்து பெறும் நாம் அவர்களுக்கு எப்படிக்கடனாளிகளாக ஆகமாட்டோம்.

சங்கை:— இதனால் மழை முதலிய உபகாரங்களை நாம் சூரியனிடமிருந்து பெறுவதால் நாம் அவனுக்குக் கடனாளியென்றும் அக்கடனைத்தீர்த்துக்கொள்ள நாம் ஸந்தியாவந்தனம்செய்ய வேண்டும் என்றும் ஏற்படுகிறதல்லவா! அதே உபகாரங்களைப் பெறும் சூத்திரர் முதலிய பலரும் தத்தம் கடனைத் தீர்த்துக்கொள்ள ஸந்தியாவந்தனம் செய்வது அவசியமன்றோ! அவர்களுக்கு ஸந்தியாவந்தனம் செய்ய அதிகாரமில்லை என்றால் அவர்கள் எப்படித் தம் கடன்களைத் தீர்த்துக்கொள்வது?

ஸமாதானம்:— சூத்திரர்களும் அப்பேர்ப்பட்ட உபகாரத்தைப் பெறுவதால் கடனாளிகள் என்பது உண்மையே. ஆயினும் அவர்கள் அக்கடனைச்சந்தியாவந்தனத்தினாலேயே தீர்க்கவேண்டும் வேறு விதத்தால் தீர்க்கக்கூடாது என்று என்ன நிர்ப்பந்தம்? பகவான் ஸகலப் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்போதே அவரவர்களுக்கு யோக்கியமான வர்ணாச்ரம தர்மங்களையும் ஸ்தாபித்து ஒவ்வொருவரும் தத்தம்வர்ணாச்ரம தர்மத்தையே அனுஷ்டிக்கவேண்டும்: பிற வர்ணாச்ரம தர்மத்தை அனுஷ்டிக்கக்கூடாது; அப்படி மீறி அனுஷ்டித்தால் மஹாஅனர்த்தங்கள் உண்டாகும் என்பதை கீதா முதலிய நூல்களில் விதித்திருக்கிறார்.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

ஶ்ரேயாந்ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத்
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ॥

“ தன் வர்ணத்திற்கும், ஆச்ரமத்திற்கும், விதிக்கப்பட்ட கர்மமானது குணமற்றதாயிருப்பினும் அதுதான் மேலானது. தன் ஸ்வதர்மத்தைச் செய்யுங்கால் மாணம் நேரிடினும் அதைக் கைவிடலாகாது. பிற தர்மத்தை அனுஷ்டித்தால் அதை விட மஹா அனர்த்தங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும். ”

ஆகவே சூத்திரர்கள், அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் திரிவர்ணர்களுக்குப் பரிசர்யை முதலிய தம் தர்மங்களை அனுஷ்டிப்பதால் தம் கடன்களைப் பரிஹரித்துக் கொள்ளுகிறார்கள். ஸந்தியாவந்தனத்தினாலேயே பரிஹரித்துக்கொள்ள வேண்டும் என்று என் ஆக்ரஹம் ?

சங்கை: — प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते ।

ப்ரயோஜநமநுத்³தி³ஶ்ய ந மந்தோ³ऽபி ப்ரவர்ததே ।

எப்பேர்ப்பட்ட மூடனாயினும் யாதொரு பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் ஒரு காரியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்ற லோக நியாயத்தாலும் न कुर्यान्निष्फलं कर्म ந குர்யாந்நிஷ்ப²லம் கர்ம பிரயோஜனமற்ற காரியத்தைச் செய்யக் கூடாது என்ற சுருதியாலும் நிஷ்பலமான காரியத்தைச்செய்யலாகாது என்று தெரிய வருவதால் நிஷ்பலமான ஸந்தியாவந்தனத்தை நாம்செய்யலாமா?

ஸமாதானம்:— ஸந்தியாவந்தனம் முற்றிலும பிரயோஜனமற்றதல்ல. மாம் பழத்திற்காகவென்றே பயிரிடப்பட்ட மாமரம்நிழலையும் வாஸனையையும் எப்படித் தருகின்றதோ தான்யத்தின்பொருட்டே பயிரிடப்பட்டபோதிலும் நெற்பயிற் எப்படி வைக்கோலைக் கொடுக்கின்றதோ குளிரைப் போக்கடிக்கவேண்டி மூட்டப்பட்ட அக்கினியானது எப்படி பிரகாசத்தைத் தருகின்றதோ அப்படியே பகவானின் ஆக்ஞாரூபமாகக் கருதிச் செய்யப்படும் ஸந்தியாவந்தனமும் முன் கூறப்பட்ட தீர்க்காயுஸ், நல்ல அறிவு, கீர்த்தி முதலிய சிறந்த பயன்களையும் தருகிறது. மேலும

यत्सायमासीनः सन्ध्यामुपास्ते तया वीरस्थानं जयति । यत्प्रातस्तिष्ठन् तया स्वर्गलोकं जयति ।

யதா³ஸீந: ஸந்த்⁴யாமுபாஸ்தே தயா வீரஸ்வர்க³ம் ஜயதி। யத்திஷ்ட²ந்தயா ஸ்வர்க³லோகம் ஜயதி।

ஸாயம் ஸந்தியை உட்கார்ந்து செய்வதால் வீர ஸ்வர்க்கத்தை அடைகிறான். பிராதஸ்ஸந்தியை நின்று கொண்டு செய்வதால் ஸ்வர்க்கலோகத்தை அடைகிறான். (ஸ்மிருதி ரத்னகாத்தில் உதாஹரிக்கப்பட்ட சுருதி)

पूर्वां सन्ध्यां जपं स्तिष्ठन्नैशमेनो व्यपोहति ।
पश्चिमां तु समासीनो मलं हन्ति दिवा कृतम् ॥

பூர்வாம் ஸந்த்⁴யாம் ஜபம்ஸ்திஷ்ட²ந்நைஶமேநோ வ்யபோஹதி।
பஶ்சிமாம் து ஸமாஸீநோ மலம் ஹந்தி தி³வா க்ருதம் ॥

பிராதஸ்ஸந்தியாவை நின்றுகொண்டு அனுஷ்டிப்பதால் இரவில் மனஸினாலும், வாக்கினாலும், பாதங்களாலும், கைகளாலும், வயிற்றினாலும் செய்யப்பட்ட ஸகல பாபங்களையும் போக்கடித்துக் கொள்கிறான். ஸாயம் ஸந்தியாவை அனுஷ்டிப்பதால் பகலில் செய்யப்படும் ஸகல பாபங்களையும், விலக்கிக்கொள்கிறான். மநுஸ்மிருதி.

सन्ध्यामुपासते ये तु निष्पापा ब्रह्मलोकगाः ।

ஸந்த்⁴யாமுபாஸதே யே து நிஷ்பாபா ப்³ரஹ்மலோககா³: ।

ஸந்தியாவை உபாஸிப்பவர்கள் ஸமஸ்த பாபங்களினின்றும் விடுபட்டவர்களாய் பகவானுடைய லோகத்தை அடைகின்றனர்.

மேற்கண்ட வசனங்களால் ஸந்தியாவந்தனத்திற்குப் பல பிரயோஜனங்கள் உண்டானபடியால் அதை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும்.

ஸந்தியாவந்தனத்தைச் செய்யும் காலம் யாது?

शुचिर्वाप्यशुचिर्वापि काले सन्ध्यां समाचरेत् ।

ஶுசிர்வாப்யஶுசிர்வாபி காலே ஸந்த்⁴யாம் ஸமாசரேத் ।

சுத்தனாயிருப்பினும்சரி, அசுத்தனாயிருப்பினும்சரி, குறித்தகாலத்திலேயே ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும்.

काले तु वन्दिता सन्ध्या स्वर्गमोक्षप्रदायिनी ।
अकाले वन्दिता सन्ध्या सा च वन्ध्या वधूरिव ॥

காலே து விஹிதா ஸந்த்யா ஸ்வர்கமோக்ஷப்ரதாயிநீ ।
அகாலே விஹிதா ஸந்த்யா வந்த்யா ஸ்த்ரீ வோஷரே க்ருஷி: ।

குறித்த காலத்தில் செய்யப்படும் ஸந்தியாவானது ஸ்வர்க்கம் மோக்ஷம், முதலிய பலன்களைத் தருகிறது. அக்காலத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ செய்யப்பட்டால் ஒரு வந்தியா ஸ்திரீயைப் போல் யாதொரு பிரயோஜனத்தையும் தராது. அதாவது ஊஷரபூமியில் (பாலைவனத்தில்) விதைக்கப்பட்ட விதை போல் நிஷ்பலமாகும் என்பது கருத்து.

उत्तमा तारकोपेता मध्यमा लुप्ततारका ।
अधमा सूर्यसहिता प्रातः सन्ध्या त्रिधा मता ॥

உத்தமா தாரகோபேதா மத்யமா லுப்ததாரகா ।
அதமா ஸூர்யஸஹிதா ப்ராத: ஸந்த்யா த்ரிதா மதா ।

பிராதஸ்ஸந்தியா மூன்றுவிதமானது. காலையில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போது செய்யப்படுவது மிகவும் உத்தமமானது; நக்ஷத்திரங்கள் மறைந்து சூரிய உதயம் ஆவதற்குள் செய்யப்படுவது மத்யமமானது; சூரியன் உதயமானபிறகு செய்யப்படுவது அதமமாகும்.

उत्तमा सूर्यसहिता मध्यमाऽस्तमिते रवौ ।
अधमा तारकोपेता सायं सन्ध्या त्रिधा मता ॥

உத்தமா ஸூர்யஸஹிதா மத்யமாऽஸ்தமிதே ரவௌ ।
அதமா தாரகோபேதா ஸாயம் ஸந்த்யா த்ரிதா மதா ।

ஸாயம்ஸந்தியாவும் மூன்றுவகையுள்ளது. ஸாயங்காலத்தில் ஸூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போதே செய்யப்படுவது உத்தமமானது; சூரியன் அஸ்தமித்தபிறகு நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் தோன்றும்வரையில் செய்யப்படுவது மத்யமமானது; நக்ஷத்திரங்கள் தோன்றினபிறகு செய்யப்படுவது அதமமானது. (தமிழிலும் 'காணுமல் கோணுமல் கண்டுகொடு' என்ற வாக்கியத்தில் மேற்படி விஷயம் அடங்கியிருக்கிறது.)

இவ்வசனங்களால் நாம் பிரதிதினமும் செய்யும் இருஸந்தியாவந்தனங்களும் அதமமானவையென்றே புலப்படுவதால் உத்தமகல்பமான ஸந்தியாவை அனுஷ்டிக்கமுயலுவது மிகவும் அவசியம். இவ்விஷயமே பின்னும் சில ஸ்மிருதிகளிலும் கூறப்பட்டிருக்கிறது.

पूर्वां सन्ध्यां सनक्षत्रां मुत्तरां सदिवाकराम् ।

பூர்வாம் ஸந்த்யாம் ஸநக்ஷத்ராம் முத்தராம் ஸதிவாகராம் ।

பிராதஸ்ஸந்தியாவை நக்ஷத்திரங்களுடன்கூடிய ஸமயத்திலும், ஸாயம்ஸந்தியாவை ஸூரியனோடுகூடிய காலத்திலும் செய்ய வேண்டும். (ஸதாசாரஸ்மிருதி)

नक्षत्रसहितां पूर्वां पश्चिमां सूर्यसंयुताम् ।

நக்ஷத்ரஸஹிதாம் பூர்வாம் பஶ்சிமாம் ஸூர்யஸம்யுதாம் ।

பிராதஸ்ஸந்தியாவை நக்ஷத்திரங்களோடு கூடியதாயும், ஸாயம் ஸந்தியாவை ஸூரியனோடு கூடியதாயும் செய்யவேண்டும். (கண்வஸ்மிருதி)

प्रातः सन्ध्यां सनक्षत्रां उपासीत यथाविधि ।
सावित्रीं पश्चिमां सन्ध्यां अर्धास्तमितभास्करे ॥

ப்ராத: ஸந்த்யாம் ஸநக்ஷத்ராம் உபாஸீத யதாவிதி ।
ஸாவித்ரீம் பஶ்சிமாம் ஸந்த்யாம் அர்தாஸ்தமிதபாஸ்கரே ॥

காலைஸந்தியாவந்தனத்தை நக்ஷத்திரங்களுடன்கூடின காலத்திலும் மாலைஸந்தியாவந்தனத்தை ஸூரியன் பாதிமறைந்திருக்கும் போதும் சாஸ்திரோக்தமாய்ச் செய்யவேண்டும்.

ஸந்தியாவந்தனம் செய்யவேண்டிய இடம்:—

நம்மிற் சிலர் ஓர் நதியில் அர்க்யம்வரையில் செய்துவிட்டு ஜபம் முதலியவற்றை வீட்டில்போய்ச் செய்கிறார்கள். இம்மாதிரி ஸந்தியாவந்தனத்தின் ஓர் பாகத்தை ஓர் இடத்திலும் மற்றொரு பாகத்தை மற்றோர் இடத்திலும் செய்வது சாஸ்திரீயமல்லவென்பது பின்கண்ட சுலோகத்தால் தெரியவரும்.

सन्ध्याप्रदेशे सन्ध्यायां सन्ध्यां तत्र समापयेत् ।
अन्यत्र तु जपं कुर्यात् सा सन्ध्या निष्फला भवेत् ॥

ஸந்த்யாப்ரதேஶே ஸந்த்யாயாம் ஸந்த்யாம் தத்ர ஸமாபயேத் ।
அந்யத்ர து ஜபம் குர்யாத் ஸா ஸந்த்யா நிஷ்பலா பவேத் ॥

'ஸந்தியையைச்செய்யும் பிரதேசத்திலேயே ஜபம் முதலியவைகளைச் செய்துமுடிக்கவேண்டும். அப்பிரதேசத்தை விட்டு வேறு இடத்தில் செய்யப்படும் ஜெபமானது நிஷ்பலமாகும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

गृहे त्वेकगुणा सन्ध्या गोष्ठे शतगुणा स्मृता ।
शतसाहस्रिकां नद्यां अनन्ता विष्णुसन्निधौ ॥

𑌗𑍃𑌹𑍇 𑌤𑍍𑌵𑍇𑌕𑌗𑍁𑌣𑌾 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 𑌗𑍋𑌷𑍍𑌠𑍇 𑌶𑌤𑌗𑍁𑌣𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ।
𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌿𑌕𑌾𑌂 𑌨𑌦𑍍𑌯𑌾𑌂 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥

'வீட்டில் செய்யப்படும் ஸந்தியாவந்தனத்திற்கு ஒரு மடங்கு பலன்; அதைப்போல் நூறுமடங்கு பலனுள்ளது மாட்டுக்கொட்டகையில் செய்யப்படுவது; நதியில் செய்யப்பட்டாலோ லக்ஷம் மடங்கான பலனுடையது, விஷ்ணுவின் முன்னிலையில் செய்யப்படுவதின் பலனைச் சொல்லிமுடியாது, அனந்தமான பலனைத் தரத்தக்கது.

மாட்டுக்கொட்டகையில் செய்யப்படும் ஸந்தியைக்கு என்ன அவ்வளவு மாகாத்மியம்? நண்பர்களே! பசுவை நாம் தெய்வமாகக் கொண்டாடுவதேன்?

அதன் சரீரம் முழுவதும் பதினான்குஉலகங்களும் வஸிக்கின்றன.

गवामङ्गेषु तिष्ठन्ति भुवनानि चतुर्दश ।

𑌗𑌵𑌾𑌮𑌙𑍍𑌗𑍇𑌷𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 ।

நீங்கள் இவ்விஷயத்தை விளக்கும் படம் அனேகர் வீடுகளில் இருப்பதைப் பார்த்திருக்கலாம். அம்மாத்திரமல்ல, அதன் காற்று நம்மீது பட்டாலும் அனேக ரோகங்கள் பறந்துபோம். அதன் சாணத்தில் விஷப்பூச்சிகளைக் கொல்லும் சக்தி அமைந்திருக்கிறது. இச்சூக்ஷ்மம வெகுநாளாய்த் தெரியாமல் ஸமீபகாலமாய் வைத்தியசாஸ்திர நிபுணர்களும் சாணத்தின் மேன்மையைக் கொண்டாடிவருகிறார்கள். நாமும் ஒருவிதமாக அதன் மஹிமையை அறியலாம். அதாவது— பசுவின் சாணததைமாத்திரம் மற்ற சாணத்துடன் கலக்காமல் அநேகநாட்கள் வைத்திருந்தபோதிலும் அதில் புழுக்கள் உண்டாவதில்லை, மற்ற சாணங்களிலோ மறுநாளே புழுக்கள் மொய்த்திருக்கும் என்பதைப் பிரத்யக்ஷமாக அறியலாம். இன்னும் கோமூத்திரத்திற்கு ஸகல வியாதிகளைப்போக்கும் வன்மையுண்டு. இப்பேர்ப்பட்ட மஹிமைகளையறிந்த நமது முன்னோர்கள் நமது ஆரோக்யத்தின் அபிவிருத்திக்காக பஞ்சகவ்யம என்பதை உட்கொள்ளவேண்டும் என்றும் அதனால் ஸமஸ்த பாபமும் போய்விடும் என்றும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

यत्त्वगस्थिगतं पापं देहे तिष्ठति देहिनः ।
प्राशनं पंचगव्यस्य दहत्यग्निरिवेन्धनम् ॥

யத்த்வகஸ்திகதம் பாபம் தேஹே திஷ்டதி தேஹிந: ।
ப்ராஶநம் பஞ்சகவ்யஸ்ய தஹத்யக்நிரிவேந்தநம் ॥

"அக்நி எப்படி விறகுக்கட்டைகளை எரித்துவிடுமோ அம்மாதிரி பஞ்சகவ்யத்தை உட்கொள்ளுதலானது ஒருவன்தேகத்தில் அதிலும் தோல், எலும்பு முதலியவைகளில் உள்ள பாபத்தை எரித்து விடுகிறது."

ஆகையால் பசுமாட்டின் கொட்டகையானது மிகவும் பரிசுத்தமான இடம் என்பதற்கையமில்லை. ஸ்ரீ கிருஷ்ணபகவான் பலராமர் இருவர்களுக்கும் உபநயனம் முதலியவை நடந்த இடம் கோஷ்டமே. விரதத்தின் உத்யாபனை முதலிய நற்காரியங்களும் அநேகமாய் கோஷ்டங்களிலேயே செயயப்படுவதை நமது நேயர்கள் அறிந்திருக்கலாம். இவ்வாறாக பரிசுத்தமான இடத்தில் செய்யப்படும் ஸந்தியை எப்படிச் சிறந்ததாகாது?

கோஷ்டத்தில் செய்யப்படும் ஸந்தியைக்காட்டிலும் நதிக்கரைகளில் செய்யப்படுவது மிகவும் சிலாக்யமானது. ஏனெனின்

आपः स्वभावतो मेध्याः ஆப: ஸ்வபாவதோ மேத்யா: ।

'ஜலம் இயற்கையாகவே பரிசுத்தமானது.' நமக்கு நேரிடும் எந்தவித அசுத்தமும் ஜலத்தினாலேயே பரிசுத்தமாக்கப்படுகின்றது. இதையொட்டி 'பல திட்டுக்கு ஓர் முழுக்கு' என்ற பழமொழியையும் நினைவூட்டுகிறேன். அதைப்பார்க்கிலும் விஷ்ணுவின் ஸந்நிதானத்தில் செய்யப்படுவது இன்னும் மேலானது. ஏனென்றால் பகவானுடைய ஸாந்நித்யம் அதிகரித்திருப்பதால்தான். ஆகவே நமது வீடுகளில் தேவகிருஹம் ஒன்று தனிமையாக அமைக்கப்பட்டும் அதிலேயே நமது ஆன்ஹிகங்களைச் செய்வதும் சிஷ்டாசாரபரம்பரையாக நிகழ்ந்துவருகிறது. இதனால் ஸந்தியாவந்தனம் என்ற ஒரே கர்மம் பலவிடங்களில் அநுஷ்டிக்கப்படினும் அந்தந்த விடங்களின் மகிமையால் ஏற்றத்தாழ்வான பலனைத் தருகின்றது.

எந்தப் பாஷையில் செய்வது? ஸம்ஸ்கிருத பாஷையில் உள்ள ஸந்தியாவந்தன மந்திரங்களை ஏன் தமிழில் உச்சரிக்கலாகாது?

அநாதிகாலமாக தேவபாஷையாகிய ஸம்ஸ்கிருதத்திலேயே நாம் செய்துவரும் கர்மங்களையும் மந்திரங்களையும் தமிழ்ப்பாஷையிலோ அல்லது எனைய ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளிலோ செய்யலாகாது. ஏனென்றால் நாம் முன்பின் அறியாத ஓர் ஊருக்குப்போய் நமக்குவேண்டிய ஸௌகர்யங்களைப் பெறமுடியாமல் திகைத்துக்கொண்டிருக்கையில் அவ்வூராரின் பாஷையிலேயே ஒருவனோடு நாம் ஸம்பாஷித்தால் அவனுக்கு நம்மிடம் விசேஷப்ரீதி உண்டாகி வேண்டிய உதவிகளைச் செய்கிறான். அம்மாதிரி தேவதைகளின் ஸ்வயபாஷையாகிய ஸம்ஸ்கிருதத்தில் அவர்களைப் பிரார்த்தித்தால்தான் அவர்கள் நம்மீது மிகுந்த அநுகாஹம் புரிவார்கள், இல்லையேல் சபிப்பார்கள்.

சங்கை:— உலகத்தில் சாதாரண மனிதனே அனேக பாஷைகளில் தேர்ச்சிப்பெற்றிருக்கிறான். (A Master of many Languages) அப்படியிருக்க தேவதைகளும் தமிழ் முதலிய பாஷையில் உச்சரிக்கப்பட்ட மந்திரங்களை அறியலாமே! அனுக்ரஹமும் புரியலாமே!

ஸமாதானம்:— இச்சங்கையின் ஸமாதானத்தை ஓர் லௌகிக உதாரணத்தினால் விளக்குவோம். நம்மை ஆளும் அரசாங்கத்தார் நியாயாதிபதிக்குத்தமிழ் முதலிய மற்ற பாஷைகள் தெரிந்திருப்பினும் (Court Language) கோர்ட்டுகளில் வக்கீல்கள் ஆங்கில பாஷையிலேயே வழக்குகளை வாதிக்கவேண்டும் என்றும் தீர்ப்புகள் ஆங்கில பாஷையிலேயே வரையப்படவேண்டும் வேறு பாஷையில் கூடாது என்றும சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன்படி நடவாமல் ஒரு வக்கீல் நம் நியாயாதிபதியும் நாமும் ஒரே பாஷையைப் பேசுகிறவர்கள், ஒரே தமிழ் தேசத்தில் பிறந்திருக்கிறோம், தமிழில் வாதம்செய்தாலும் அவருக்குத்தெரியும் என்று நினைத்துத் தமிழிலேயே வாதஞ்செய்தால் நியாயாதிபதி அவர் வாதத்தைக் காதுகொடுத்துக் கேட்பாரா? இல்லை அதுபோகட்டும், அவர் வழக்கு ஜெயிக்குமா? அதுவும் போகட்டும். ராஜாங்கக் கட்டளையை மீறிக் கோர்ட்டை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்படுவார் அல்லவா. அதுபோல் ஸர்வலோக சக்கிரவர்த்தியான பகவான்

न म्लेच्छितवै...नापभाषतवै ந ம்லேச்சிதவை... நாபபாஷிதவை

என்று ஏனைய தேசபாஷைகளில் மந்திரங்களை உச்சரிக்கலாகாது, என்றும் தேவபாஷையில் உச்சரித்தாலும் அசுத்தமாக உச்சரிக்கலாகாது என்றும் தம் ஆக்ஞாரூபமான சுருதிஸ்மிருதிகளில் சட்டத்தை ஏற்படுத்தியிருப்பதால் வேதம் எந்தப் பாஷையில் வெளிவந்ததோ அந்த பாஷையில் உச்சரிக்காமல் பிறபாஷைகளில் உச்சரித்தால் தேவதாஸார்வபௌமனான பகவானின் கட்டளையை மீறினதுபோலாகும். அதனால் அனர்த்தங்களும் விளையும் மற்றொரு உதாரணத்தால் அதை விளக்குவோம். ஒரு காலேஜ் புரொபஸர் தம் மாணவர்களுக்கு ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய ஆங்கில நூல்களில் ஏகதேசத்தைப் பாராமல் ஒப்பிக்கக் கொடுத்தால் (Recitation) ஓர் புத்திமானான சிஷ்ன் மறுநாள் அந்தப் பாடத்தைத் தமிழில் மொழிபெயர்த்து ஒப்பித்தால் புரொபஸர் சந்தோஷப்படுவாரா? அல்லது இவனுக்குத்தான் B., A. பரீக்ஷை தேறுமா? அதுபோல் மந்திரங்களின் பலன் வேண்டும், தேவதைகளின் அநுக்ரஹம் வேண்டும் என்று கருதுகிறவர்கள் வடமொழியில் தான் ஸகலத்தையும் செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டியதில்லை.

இனி ஸந்தியாவந்தனத்தில் முக்கியமான சில பாகங்களைப் பற்றி மாத்திரம் சிறிது ஆராய்வோம்.

ஆசமனம்:— அனேகர் ஆசமனம் செய்வதாகக் கருதித் தம் தாகத்தைத் தணித்துக்கொள்கிறார்கள். மற்றும் சிலர் தம உத்யோக அவசரத்தில் எந்த முகமாயும் ஆசமனம் செய்கிறார்கள் அதைப்பற்றி இரண்டொரு விஷயங்களைக் கூறுகிறேன்.

गोकर्णाकृतिहस्तेन माषमात्रजलं पिबेत् ।
तस्योनमधिकं पीत्वा सुरापानसमं भवेत् ॥
हस्तमध्यगता रेखा माष इत्यभिधीयते ।
तावन्मात्रं जलं पेयं अन्यथा दोषभाग्भवेत् ॥

கோகர்ணாக்ருதிஹஸ்தேந மாஷமாத்ரஜலம் பிபேத் ।
தஸ்யோநமதிகம் பீத்வா ஸுராபாநஸமம் பவேத் ॥
ஹஸ்தமத்யகதா ரேகா மாஷ இத்யபிதீயதே ।
தாவந்மாத்ரம் ஜலம் பேயம் அந்யதா தோஷபாக்பவேத் ॥

(மேற்கண்ட சுலோகத்தில் 'மாஷம்' என்ற பதத்திற்கு 'உளுந்து' என்று அர்த்தம் கொள்கிறார்கள். அவ்வர்த்தம் இரண்டாவது சுலோகத்தோடு முரண்படுவதாலும் நவதான்யங்களில் உளுந்தை மாத்திரம் குறிக்கப்போதிய காரணம் இல்லையாலும் சரியானதல்ல)

நம்முடைய வலது உள்ளங்கையின் மத்தியிலுள்ள சிறு ரேகைக்குத்தான் மாஷம் என்று பெயர். அந்த ரேகை மறையும் படியான ஜலத்தை நாம் ஆசமனம் செய்யும்போது உட்கொள்ள வேண்டும் அதாவது நெஞ்சுக்குக் கீழே போகாத அளவு ஜலத்தைப் பருகவேண்டும். அதற்கு அதிகமாகவோ, குறைவாகவோ பானம் செய்தால் கள்ளுண்ணலுக்குச் சமானமான தோஷத்தை அடைகிறான். எப்போதும் கிழக்கு அல்லது வடக்கு முகமாகவே ஆசமனம் செய்யவேண்டும்.

प्रत्यङ्मुखश्चेदाचामेत्पुनराचम्य शुध्यति ।
याम्यदिङ्मुखमाचम्य पुनःस्नानेन शुध्यति ॥

ப்ரத்யங்முகஶ்சேதாசாமேத்புநராசம்ய ஶுத்யதி ।
யாம்யதிங்முகமாசம்ய புந:ஸ்நாநேந ஶுத்யதி ॥

மேற்கு முகமாக ஆசமனம் செய்துவிட்டால் கிழக்கு அல்லது வடக்கு முகமாகத் திரும்பி நின்று ஒரு முறை ஆசமனம் செய்தால் சுத்தனாகிறான். தெற்கு முகமாக ஆசமனம் செய்து விட்டால் மறுபடியும் ஸ்நானம் செய்தால் தான் சுத்தனாகிறான்.

பிராணாயாமம்.—

प्राणो वायुः शरीरस्थः आयामस्तस्य निग्रहः ।
प्राणायाम इति प्रोक्तः ...................... ॥

ப்ராணோ வாயு: ஶரீரஸ்த: ஆயாமஸ்தஸ்ய நிக்ரஹ: ।
ப்ராணாயாம இதி ப்ரோக்த: ........................... ॥

நம் தேஹத்தினுள்ளிருக்கும் வாயுக்குப் பிராணன் என்று பெயர். அதை வெளிவிடாமல் அடக்குவதே பிராணாயாமம் எனப்படும். நாசித்துவாரங்களில் ஒன்றை மூடிக்கொண்டு மற்றொன்றினால் வெளியுள்ள காற்றை இழுத்து அந்த துவாரத்தையும் அடைப்

பிறகு உள்ளேயே கூடுமானவரையில் அடக்கிவைத்துக் கடைசியில் வெளிவிடவேண்டும். இந்தப் பிராணாயாமத்தை நாம் கட்டாயம் செய்யவேண்டும் ஏனென்றால் அதனால் தேகாரோக்கியம் உண்டாகிறது. எப்படியெனின்,

वातप्रकोपात्प्रभवन्ति रोगाः வாதப்ரகோபாத்ப்ரபவந்தி ரோகா:

என்றபடி வாயு சரியாக சஞ்சரிக்காமல் வித்தியாஸமாக சஞ்சரித்தால் வியாதிகள் உண்டாகின்றன. பிராணாயாமத்தினால் வாயுவை அடக்கிச் சரியாக சஞ்சரிக்கும்படி செய்துவிட்டால் வியாதிகளினின்று விடுபட்டு சரீர ஆரோக்கியத்தை அடைகிறோம். மேலும் Physiology சாஸ்திரத்திலும் நாம் உட்கொள்ளும் நல்ல காற்றானது உள்ளிருக்கும் இரத்தக்குழாய்களைப் பரிசுத்தமாக்குகிறது என்று கூறப்படுகிறது. (Purifies blood circulation) பிராணாயாமத்தினால் ஆயுள்விருத்தி ஏற்படும். 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' (Death keeps no calendar) என்றபடி மரணம் நியதமாயிருக்க ஆயுள்விருத்தி எப்படி உண்டாகும் என்றால் ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் 24 மணியில் 21600, சுவாஸங்கள் விடுகிறான் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஒருவனுக்கு 100-வயது ஆயுள் என்பதும் இந்தக்கணக்கின்பேரில்தான்; வருஷ, மாஸ, நாள் கணக்கல்ல. (அதாவது 21600 × 30 சுவாஸங்கள் = ஒரு மாதம். 21600 × 30 × 12 சுவாஸங்கள் = ஒரு வருஷம். 21600 × 30 × 12 × 100 சுவாஸங்கள் = 100 வருஷம்.) இந்த நூறுவயதில் பூர்வஜன்ம கர்மத்தையொட்டிக் கொஞ்சம் ஆயுளைக்கழித்து மீதியைத்தான் இந்த ஜென்மத்தின் ஆயுளாக அமைக்கிறார். இந்த சுவாஸமானது நாம் ஒருவேலையும் செய்யாமல் சும்மாவிருக்கும்பொழுது 12 அங்குலதூரம் போகிறது. கோபத்திலும், வேகத்திலும் 18 அங்குலதூரமும் அதிக சிரமமாயிருக்கும்போது 36 அங்குல தூரமும், தூக்கத்தில் கொறட்டைவிடும்போது 96 அங்குல தூரமும், ஸ்திரீ ஸம்போககாலத்தில் 106 அங்குல தூரமும் போகிறது எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. சுவாசம் நடுநிலையான 12 அங்குலத்திற்குமேல் அதிக தூரம் போவதினால் ஆயுள் குறைவு ஏற்படுகிறது. இவ்விதம் வீணாகச் செலவழிந்த சுவாஸத்தை ஈடுசெய்யப் பிராணாயாமம் செய்யவேண்டும். பிராணாயாமத்தினால் சுவாஸத்தை அடக்கி ஸ்வாதீனம் செய்துகொண்டு

விட்டால் தகுந்தபடி செலவழித்துக்கொள்ளலாம். நாம் சிரமப்பட்டு ஒருநாள் முழுவதும் சுவாஸத்தை அடக்கிவிட்டால் அதற்குப்பலனாக முற்சொன்ன 21600 சுவாஸங்கள் அதாவது ஒரு நாள் ஆயுள் அல்லவா நமக்கு அதிகமாகவேண்டும். அப்படியில்லாமல் பகவானானவர் நம்மிடம் கிருபைகூர்ந்து பிராணாயாமத்தின் சிரமத்தையும் கருதி ஒருநாள் சுவாஸத்தை நிரோதம் செய்கிறவனுக்கு 64வருஷங்கள் ஆயுள்விருத்தியை ஏற்படுத்தியிருக்கிறார். இவ்விதப் பிராணாயாமத்தின் இடைவிடாத அப்யாஸத்தினால்தான் திரேதாயுகத்திலிருந்த தசரதர்முதலிய சக்கிரவர்த்திகளும், ரிஷிகளும் அந்தந்த யுகத்தின் ஆயுள் மானத்தைக்காட்டிலும் அதிகமாகவே 60,000வருஷம் ஜீவித்திருந்தனர்என்பதும்வெளிப்படை.

மற்றொரு காரணாலும் நாம் பிராணாயாமம் செய்யவே வேண்டும்.

शैशवेऽभ्यस्तविद्यानां यौवने विषयैषिणाम् ।
वार्धके मुनिवृत्तीनां योगेनान्ते तनुत्यजाम् ॥ ரகுவம்சம் 1.

ஶைஶவேऽப்யஸ்தவித்யாநாம் யௌவநே விஷயைஷிணாம் ।
வார்தகே முநிவ்ருத்தீநாம் யோகேநாந்தே தநுத்யஜாம் ॥

பால்யத்தில் வித்தியாப்யாஸம், யௌவனத்தில் விஷயபோகம், முதுமைப்பருவத்தில் ரிஷிகளின் ஆசாரணை கடைசியாக யோகத்தினால் சரீரத்தை விடவேண்டும் என்று சாஸ்திரத்தில் கூறப்படுகிறது. கடைசியில் யோகத்தினால் சரீரத்தைவிட ஒரேகாலத்தில் ஸாத்யமல்ல. ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா? ஆகையால் நாம் பால்யம்முதற்கொண்டே யோகத்திற்கு ஸஹாயமாகப் பிராணாயாமத்தைக் கைக்கொண்டால்தான் சுலபமாகும். அதனால் இதுதினந்தோறும்செய்யப்படவேண்டியஸந்தியாவந்தனத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பிராணாயாமம், பூரகம், கும்பகம், ரேசகம் என்று மூன்றுவிதமானது. வாயுவை உள்ளே வாங்குவதற்குப்பூரகம் என்றும்,உள்ளேயே அடக்கிவைத்திருப்பதற்குக் கும்பகம் என்றும், காற்றை வெளிவிடுவதற்கு ரேசகம் என்றும் பெயர். பிராணாயாமத்தில் அகர்ப்பம் ஸகர்ப்பம் என்ற வேறு இருவிதமும் உண்டு, ஜபம், தியானம் முதலியவைகளைச் செய்து

கொண்டே பிராணாயாமம் செய்தால் அது ஸகர்ப்பமாகும்; அவ்விதமல்லாதது அகர்ப்பமாகும். இவைகளில் ஸகர்ப்பம்தான் கோடிமடங்கு சிரேஷ்டமானது.

पूरकः कुम्भको रेचः प्राणायामस्त्रिलक्षणः ।
अगर्भश्च सगर्भश्च प्राणायामो द्विधा स्मृतः ।
अगर्भो ध्यानहीनस्तु सगर्भो ध्यानसंयुतः ।
अगर्भात्कोटिगुणितः प्राणायामः सगर्भकः ॥

𑌪𑍂𑌰𑌕𑌃 𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑍋 𑌰𑍇𑌚𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 ।
𑌅𑌗𑌰𑍍𑌭𑌶𑍍𑌚 𑌸𑌗𑌰𑍍𑌭𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍋 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
𑌅𑌗𑌰𑍍𑌭𑍋 𑌧𑍍𑌯𑌾𑌨𑌹𑍀𑌨𑌸𑍍𑌤𑍁 𑌸𑌗𑌰𑍍𑌭𑍋 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 ।
𑌅𑌗𑌰𑍍𑌭𑌾𑌤𑍍𑌕𑍋𑌟𑌿𑌗𑍁𑌣𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌃 𑌸𑌗𑌰𑍍𑌭𑌕𑌃 ॥

இம்மாதிரி தேக ஆரோக்யத்திற்கும் ஆயுள்விருத்திக்கும், ஸாதனமான பல ஆசார அநுஷ்டானங்களை ஸந்தியாவந்தனம் முதலிய கர்மங்களோடு நமது முன்னோர்கள் இணைத்திருக்கிறார்கள். அதை அறியாமல் நாம் ஸந்தியாவந்தனத்திற்கு லீவ் கொடுத்துவிட்டபடியால் தேகஆரோக்யமும் ஆயுள்விருத்தியும் தாங்களே (French leave) லீவு எடுத்துக்கொண்டுவிட்டன. (அவைகளே நம அனுமதியன்னியில் போய்விட்டன.) தற்காலம் பிராணாயாமத்தின் மஹிமையை அமெரிக்காமுதலிய மேனாட்டார் அறிந்து அதைப் பள்ளிக்கூடங்களில் ஒரு கட்டாயப்பாடமாக Breathing Exercise என்ற பெயருடன் ஏற்படுத்தியுள்ளார். இம்மாதிரி நமது சாஸ்திரங்களின் உண்மையை மேனாட்டார்கள் அறிந்து நமக்குப் போதித்தால்தான் நம்மவர்களுக்குப்பத்தியமாகவிருக்கிறதேயொழிய நமது ஆசாரியர்களும், பெரியோர்களும் அதே விஷயத்தைச் சொல்லும்போது செவி சாய்ப்பதில்லை. இது காலத்தின் கோலமேயாகும்.

यद्रात्र्यात्कुरुते पापं कर्मणा मनसा गिरा ।
तिष्ठन्वै पूर्वसन्ध्यायां प्राणायामैर्व्यपोहति ॥
अदह्नात्कुरुते पापं कर्मणा मनसा गिरा ।
यासीनः पश्चिमां सन्ध्यां प्राणायामैर्व्यपोहति ॥

𑌯𑌦𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌮𑌨𑌸𑌾 𑌗𑌿𑌰𑌾 ।
𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑌤𑌿
𑌯𑌦𑌹𑍍𑌨𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌮𑌨𑌸𑌾 𑌗𑌿𑌰𑌾 ।
𑌆𑌸𑍀𑌨𑌃 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌾𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑌤𑌿

மனோவாக்காயங்களால் இரவில்செய்யப்படும் பாபமானது காலைப் பிராணாயாமத்தாலும், பகலில் செய்யப்படுவது மாலைப்பிராணாயாமத்தாலும் போக்கடிக்கப்படுகிறது.

ரிஷி, சந்தஸ் முதலியன:— ஒவ்வொரு மந்திரத்திற்கும் அம்மந்திரத்ரஷ்டாவான ரிஷியையும் அது எந்த சந்தஸ் என்பதையும், அம்மந்திரத்தின் பிரதிபாத்யமூர்த்தி (தேவதை) எது என்பதையும், அதன் அர்த்தத்தையும், ந்யாஸம், விநியோகம் முதலியவைகளையும் அறிந்தே மந்திரங்களை உச்சரிக்கவேண்டும். இல்லையேல் 'எவனொருவன் ரிஷி, தேவதை, சந்தஸ், அர்த்தம் இவைகள் அறியப்படாத மந்திரத்தினால் யாகம் செய்கிறானோ, அல்லது யாகத்தைச் செய்விக்கிறானோ அத்யயனம் செய்கிறானோ அல்லது செய்விக்கிறானோ அவன் மரம் முதலியதின் ஜன்மத்தையடைகிறான், அற்பாயுளை அடைகிறான், நரகத்தில் விழுகிறான்'' என்று சுருதி கூறுகிறது.

अविदित्वा ऋषिच्छन्दो दैवतं योगमेव च ।
योऽध्यापयेद्यजेद्वापि पापीयान्जायते तु सः ॥

𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾 𑌋𑌷𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑍋 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌯𑍋𑌗𑌮𑍇𑌵 𑌚 ।
𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌯𑌜𑍇𑌦𑍍𑌵𑌾𑌪𑌿 𑌪𑌾𑌪𑍀𑌯𑌾𑌨𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑍁 𑌸𑌃 ॥

"ரிஷி, சந்தஸ், தேவதை, யோகம் இவற்றையறியாமல் எவன் அத்யயனம் செய்விக்கிறானோ, அல்லது யாகம் செய்கிறானோ, அவன் பாபியாகிறான்.''

न्यासहीने हरेदायुः ध्यानहीने तु निष्फलम् ।
मृत्युः स्याद्देवताऽज्ञाने छन्दोऽज्ञाने च निष्फलम् ।
ऋषिहीने महाव्याधिः भवत्येव न संशयः ॥
तस्माद्देवर्षिच्छन्दांसि ज्ञातव्यानि महात्मभिः । நாரதீயம்.

𑌨𑍍𑌯𑌾𑌸𑌹𑍀𑌨𑍇 𑌹𑌰𑍇𑌦𑌾𑌯𑍁𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌹𑍀𑌨𑍇 𑌤𑍁 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌮𑍍 ।
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌛𑌨𑍍𑌦𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌚 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌮𑍍 ।
𑌋𑌷𑌿𑌹𑍀𑌨𑍇 𑌮𑌹𑌾𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌃 𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 ।

ஒரு மந்திரத்தின் ந்யாஸத்தை விட்டுவிட்டால் ஆயுள் குறைந்து விடும். த்யானத்தை விட்டுவிட்டாலும், சந்தஸ்ஸை அறியாவிட்டாலும், பலனில்லை. ரிஷியை விட்டுவிட்டால் வியாதியால் பீடிக்கப்படுகிறான், தேவதையை அறியாவிட்டால் மரணம் நேரிடும் இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை. ஆகையால் தேவதை, ரிஷி, சந்தஸ் இவைகளைக் கட்டாயம் அறிந்துகொள்ளவேண்டும்.

மார்ஜனம்:— தீர்த்தத்தை நம்முடைய அவயவங்களில் மந்திரபூர்வகமாகப் புரோக்ஷணம் செய்துகொள்வதற்கு மார்ஜனம் எனப்பெயர். நாம் செய்யும் ஸ்நானத்தினால் பரிஹரிக்கப்படாத பல பாபங்களை இந்த மார்ஜனம் நாசம் செய்கிறது. ஆபோஹிஷ்டா என்ற மந்திரத்தால்தான் மார்ஜனம் செய்துகொள்கிறோம்.

संवत्सरकृतं पापं मार्जनान्ते विनश्यति ।

𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।

ஒரு வருஷத்திற் செய்யப்பட்ட பாபங்கள் யாவும் இந்த மார்ஜனத்தினால் நாசம் செய்யப்படுகின்றன.

विना यस्तुलसीं कुर्यात्सन्ध्याकाले तु मार्जनम् ।
तत्सर्वं राक्षसहृतं नरकं च प्रयच्छति ॥

𑌵𑌿𑌨𑌾 𑌯𑌸𑍍𑌤𑍁𑌲𑌸𑍀𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌕𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌹𑍃𑌤𑌂 𑌨𑌰𑌕𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

நாம் விரல்களினாலேயே மார்ஜனம் செய்துகொள்கிறோமல்லவா! 'ஸந்தியாகாலத்தில் துளஸியினால் எவன் மார்ஜனம் செய்துகொள்கிறதில்லையோ, அவன் நரகத்தையடைவதுடன் அவன் செய்யும் கர்மாவானது ராக்ஷஸர்களினால் அபஹரிக்கப்படுகிறது" என்று கூறப்பட்டிருப்பதால் துளஸியைக்கொண்டே மார்ஜனம் செய்ய வேண்டும்.

ஆபோஹிஷ்டா என்ற மந்திரத்தில் 9 ரிக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு ரிக்கினாலும ஒரு மார்ஜனமாக மொத்தம் 9-தடவைதான் தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக்கொள்ளவேண்டும். பெரும்பாலும் அநேகர் ஸந்தியாவந்தனம் செய்கையில் புரோக்ஷித்துக்கொள்வதற்குக் கணக்கேயில்லை. அவர்கள் 9-முறை புரோக்ஷணத்தினால் ஒரு வருஷத்தின் பாபம் நீங்கும் என்ற கணக்கை மனதில் வைத்துக்கொண்டு அநேக வருஷங்களின் பாபங்களைப் பரிஹரிக்க முயலுகிறார்கள்போலும்!

சங்கை:— மார்ஜனமானது ஒன்பதுமுறை என்? ஒன்று குறைவாகவாவது அதிகமாயாவது கூடாதா? என்றால்

रजस्तमो मोहजाताञ्जाग्रत्स्वप्नसुषुप्तिजान् ।
मनोवाक्कायजान्दोषान्नवैतान्नवभिर्दहेत् ॥

ரஜஸ்தமோ மோஹஜாதாந்ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திஜாந் ।
மநோவாக்காயஜாந்தோஷாந்நவைதாந்நவபிர்தஹேத் ॥

நம்மால் செய்யப்படும் பாபங்கள் ஒன்பதுவகையாவன. 1. ரஜோ குணத்தினாலும், 2. தமோகுணத்தினாலும், 3. அக்ஞானத்தினாலும், 4. ஜாக்ரதவஸ்தையிலும் (விழித்துக்கொண்டிருக்கையில்) 5. ஸ்வப்னவஸ்தையிலும், 6. தூங்கும்போதும், 7. மனதினாலும், 8. வாக்கினாலும், 9. சரீரத்தாலும் செய்யப்படுவன. இந்த ஒன்பது தோஷங்களைப் பரிஹரிக்கவே ஒன்பதுமுறை மார்ஜனம் விதிக்கப்பட்டிருப்பதால் இதன் ஸங்கியைவிஷயத்தில் ஆக்ஷேபிக்க இடமில்லை.

மார்ஜனம், பாஹ்யதோஷத்தையும் 'ஸூர்யஸ்ச' என்கிற மந்திரத்தினால் செய்யப்படும் பிராசனமானது ஆந்தரதோஷத்தையும் போக்கடிக்கின்றது.

அர்க்கியப்பிரதானம்:— அர்க்கியம் விடுவதின் தத்வம் யாது ஒவ்வொருநாளும் என் விடவேண்டும்? இதன் ஸம்பந்தமாய் அறியப்படவேண்டிய விதிகள் யாவை? என்ற பல சங்கைகளுக்கு இங்கு விடையளிப்போம்.

தைத்திரீய ஆரண்யகம் இரண்டாவது பிரச்னம் இரண்டாவது அநுவாகத்தில் இதன் தத்வம் விவரிக்கப்பட்டிருக்கிறது. மந்தேஹாள் என்னும் அஸுரர்கள் கடுந்தவம் புரிந்து ஸூரியனோடு சண்டைசெய்ய பிரம்மதேவரிடமிருந்து வரத்தைப் பெற்றனர். அவர்கள் ஆயிரக்கணக்காக ஸந்தியாகாலங்களில் ஸூரியனைச் சூழ்ந்துகொண்டு அவனைத் தின்பதற்கு முயலுகிறார்கள். அவ்விருவருக்கும் கொடிய யுத்தம் உண்டாகிறது. அப்போது (ஸந்தியாகாலங்களில்) பிராம்மணோத்தமனால் காயத்ரீ மந்திரத்தினால் மந்திரிக்கப்பட்டு விடப்படும் அர்க்கியமானது காயத்ரீமந்திரத்தின் மஹிமையினால் வஜ்ராயுதமாக மாறி அவ்வரக்கர்களைத் தாக்கி அவர்களின் இருப்பிடமான அருணம் என்னும் தீவில் அவர்களைத் தூக்கியெறிந்து ஸூரியனை மீட்டுவிடுகிறது. விஷ்ணு புராணத்திலும் இவ்விஷயம் பின்வரும் சுலோகங்களால் கூறப்பட்டிருக்கிறது.

सन्ध्याकाले च सम्प्राप्ते घोरे परमदारुणे ।
मन्देहा राक्षसा घोराः सूर्यमिच्छन्ति खादितुम् ॥
प्रजापतिकृतः शापः तेषामैरेयरक्षसाम् ।
अक्षयत्वं शरीराणां मरणं च दिने दिने ॥
ततः सूर्यस्य तैर्युद्धं भवत्येव सुदारुणम् ।
ततो द्विजोत्तमस्तोयं प्रक्षिपेत महामुने ॥
ॐकारब्रह्मसंयुक्तं गायत्र्याचाभिमन्त्रितम् ।
तेन दह्यन्ति ते पापाः वज्रीभूतेन वारिणा ॥

𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌘𑍋𑌰𑍇 𑌪𑌰𑌮𑌦𑌾𑌰𑍁𑌣𑍇 ।
𑌮𑌨𑍍𑌦𑍇𑌹𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾 𑌘𑍋𑌰𑌾𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌖𑌾𑌦𑌿𑌤𑍁𑌮𑍍 ॥
𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌕𑍃𑌤𑌃 𑌶𑌾𑌪𑌃 𑌤𑍇𑌷𑌾𑌮𑍈𑌰𑍇𑌯𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌮𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑌯𑌤𑍍𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑌰𑌣𑌂 𑌚 𑌦𑌿𑌨𑍇 𑌦𑌿𑌨𑍇 ॥
𑌤𑌤𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍈𑌰𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌵 𑌸𑍁𑌦𑌾𑌰𑍁𑌣𑌮𑍍 ।
𑌤𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑍋𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇 ॥
𑌓𑌂𑌕𑌾𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌚𑌾𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑍇𑌨 𑌦𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌪𑌾𑌪𑌾𑌃 𑌵𑌜𑍍𑌰𑍀𑌭𑍂𑌤𑍇𑌨 𑌵𑌾𑌰𑌿𑌣𑌾 ॥

ஸந்தியாகாலம் வந்தவுடன் மந்தேஹாள் என்ற கொடிய அரக்கர்கள் ஸூரியனைப் பக்ஷிக்கவிரும்புகிறார்கள். அவர்களுக்கு பிரம்மதேவர் கொடுத்த வரன், ஒவ்வொரு நாளிலும் மரணமடைந்தும் மறுநாள் பிழைத்து எழுந்திருக்கலாம் என்பது அவர்களுக்கும் ஸூரியனுக்கும் கொடிய யுத்தம் நடக்கிறது. அப்போது பிராமணோத்தமனானவன் அர்க்யத்தை ஓங்காரத்துடனும் காயத்ரீயாலும் மந்திரித்துவிடவேண்டும். வஜ்ராயுதமாக மாறின அந்த ஜலத்தால் அந்தப்பாபிகளான ராக்ஷஸர்கள் தஹிக்கப்படுகின்றனர்.

ततः प्रयाति भगवान् ब्राह्मणैरभिरक्षितः ।
वालखिल्यादिभिश्चैव जगतः पालनोद्यतः ॥

𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌰𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ।
𑌵𑌾𑌲𑌖𑌿𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌜𑌗𑌤𑌃 𑌪𑌾𑌲𑌨𑍋𑌦𑍍𑌯𑌤𑌃 ॥

பிறகு, ஸூரியன் பிராமணர்களாலும் லோகக்ஷேமத்தில் கண்ணுங் கருத்துமுள்ள வாலகில்யாதி ரிஷிகளாலும் காப்பாற்றப்பட்டுப் போகிறான்.

ஹாரீதஸ்மிருதி 4-ம் அத்தியாயம்:—

आदित्येन सह प्राप्ता मन्देहानाम राक्षसाः ।
युध्यन्ति वरदानेन ब्रह्मणो ऽव्यक्तजन्मनः ॥ ७७ ॥
उदकाञ्जलिनिक्षेपाः गायत्र्याचाभिमन्त्रिताः ।
निघ्नन्ति राक्षसान्सर्वान् मन्देहाख्यान्द्विजेरिताः ॥ ७८ ॥
ततः प्रयाति सविता ब्राह्मणैरभिरक्षितः ।
मरीच्याद्यैः महाभागैः सनकाद्यैश्च योगिभिः ॥ ७९ ॥
तस्मान्नलंघयेत्सन्ध्यां सायं प्रातः समाहितः ।
उल्लंघयति यो मोहात् स याति नरकं ध्रुवम् ॥ ८० ॥

𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍇𑌨 𑌸𑌹 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌮𑌨𑍍𑌦𑍇𑌹𑌾𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃 ।
𑌯𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌰𑌦𑌾𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 ॥ ௭௭ ॥
𑌉𑌦𑌕𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌃 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌚𑌾𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌨𑌿𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑌨𑍍𑌦𑍇𑌹𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌰𑌿𑌤𑌾𑌃 ॥
𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌰𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ।
𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍈𑌃 𑌸𑌨𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃 ॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌲𑌂𑌘𑌯𑍇𑌤𑍍𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌂 𑌸𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ।
𑌉𑌲𑍍𑌲𑌂𑌘𑌯𑌤𑌿 𑌯𑍋 𑌮𑍋𑌹𑌾𑌤𑍍 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌰𑌕𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥ ௮௦ ॥

பிரம்மதேவரின் வரதானத்தினுல் மந்தேஹாள் என்ற ராக்ஷஸர்கள் காலையிலும், (மாலையிலும்) ஸூரியனோடு யுத்தம் செய்கின்றனர். அப்போது பிராமணர்களால் பிரயோகிக்கப்பட்டவையாயும் காயத்ரீமந்திரத்தால் மந்திரிக்கப்பட்டவையாயுமான அர்க்யங்கள் அவர்களனைவரையும் கொன்றுவிடுகின்றன. பிறகு ஸூரியன் மரீசிரிஷி, ஸநகாதியோகிகள் முதலிய புண்யசாலிகளால் காப்பாற்றப்பட்டவனுய் தடையன்னியில் போகிருன். ஆகையால் ஸந்தியாகாலத்தை மீறக்கூடாது, எவன் மீறுகிருனே அவன் நரகத்தையடைவான்.

சங்கை:— அர்க்யம் விடுவது மந்தேஹாள் என்ற அரக்கர்களைக் கொல்வதற்காக எனின் ஒருவன் அர்க்யம் விட்டமாத்திரத்திலேயே அவர்கள் இறக்க, அனைவரும் என் விடவேண்டும்?

ஸமாதானம்:— ராக்ஷஸர்கள் ஆயிரக்கணக்காக இருப்பதால் அவர்கள் அனைவரையும் ஒழிக்க ஆயிரக்கணக்கான நாம் அனைவருமே அர்க்கியம் விடவேண்டும்.

சங்கை:— அப்படியாயின், நாம் அனைவரும் ஒரு நாளில் அர்க்கியம் கொடுத்தால் எல்லா அரக்கர்களும் இறந்துவிடுகிறார்களே. ஒவ்வொரு நாளும் ஏன் செய்யவேண்டும்?

ஸமாதானம்:— ஒருநாளில் மாத்திரம் போதாது. நம் வாழ்நாள்முழுவதும் பிரதிதினமும் செய்தேதீரவேண்டும். ஏனெனின், பிரம்மதேவர் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் வரன் யாது என்பதைச் சிறிது ஆராய்ந்தால் இச்சங்கையே பிறக்காது.

अक्षयत्वं शरीराणां मरणं च दिने दिने ।

அக்ஷயத்வம் ஶரீராணாம் மரணம் ச தி³நே தி³நே ।

முதல்நாளில் இறந்தவர்கள் மறுநாள் பிழைத்துவிடுகிறார்கள். மறுநாளும் கொல்லப்பட்டு அடுத்தநாளில் உயிரோடு எழுந்திருக்கின்றனர். இம்மாதிரி தினந்தோறும் பிரதி ஸந்தியாகாலத்தில் அவர்கள் பிழைத்தெழுந்து ஸூரியனுடைய கதியைத் தடைசெய்வதால் பிரதிதினமும் அர்க்கியம் கொடுக்கவேண்டும்.

சங்கை:— ஸூரியனே இயற்கையாகவே பிரதிதினமும் குறித்தகாலத்தில் உதயமாகிறான். நம்மிற் சிலர் ஸந்தியாவந்தனத்தையும் செய்கிறதில்லை, அர்க்கியத்தையும் கொடுக்கிறதில்லை. அப்படிக் கொடுக்கும் சிலரோ ஸரியான காலத்தில் கொடுக்காமல் ஸுமார் 10-மணிக்குமேல்தான் அர்க்கியம் கொடுக்கிறார்கள். (ஆபீஸ்களுக்குப் போகவேண்டியிருப்பதால் 10-மணி இல்லையேல் மத்தியானம் ஒருமணியாகலாம்.) ஸூரியன் அதுவரையில் உதயமாகாமலும், அஸ்தமிக்காமலும் இருந்து நாம் அர்க்கியம் விட்டவுடன் உதயமானால் நாம் இதை நம்பலாம். இப்போது அம்மாதிரி நம்புவதற்கு இடமில்லையே!

ஸமாதானம்:— உண்மையே, ஸர்வக்ஞனான பகவான் நாம் குறித்த காலத்தில் அர்க்கியம் விடமாட்டோம் என்பதை முதலிலேயே அறிந்து காலந்தவறாமல் அர்க்கியம் கொடுப்பதற்காகவே வாலகில்யாதிரிஷிகளையும், மரீசி முதலிய ரிஷிகளையும், ஸநகாதி மஹரிஷிகளையும் ஸ்பெஷலாக நியமித்திருக்கிறார். அதனால் ஸூரியன் யாதொரு தடையின்றி வழக்கம்போல் ஒழுங்காக உதயமாகிவருகிறான்.

वालखिल्याः सहस्राणि षष्टिर्ब्रह्मर्षयोऽखिलाः ।
पुरतोऽभिमुखं यान्ति स्तुवन्ति स्तुतिभिर्विभुम् ॥

வாயவ்யாஸ்த்ரை: ஸஹஸ்ராணி ஷஷ்டிம் ப்ரக்ஷிப்ய யோஜனே ।
பாரே தேஜஸ்ச்சைவம் யாந்தி ஸூர்யந்தி ஸூர்யதிதிப்ரபா ॥

சங்கை:— மேற்சொன்ன ரிஷிகள் அக்காரியத்திற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும்போது நாம் வீணுகச் சிரமப்படுவதேன்?

ஸமாதானம்:— ஸூரியனுக்கோ ஆயிரக்கணக்கான கிரணங்கள் உண்டென்று எல்லோரும் அறிந்ததே. அவைகளில் ஒவ்வொரு கிரணமும் ஒவ்வொரு ஜீவனுக்குத் தனித்தனியே நன்மையைப் பயக்குகிறது. ஒவ்வொரு அரக்கனும் ஒவ்வொரு ஜீவன்மேலும் அக்கிரணம் படாமல் மறைத்து ஒவ்வொருவனுக்கு நேரும் நன்மையைக் கெடுத்துவிடுகிறன். ஆகையால் அம் மஹரிஷிகளின் அர்க்கியத்தால் ஸூரியன் குறித்தகாலத்தில் உதயமாகிவிடினும் ஒவ்வொருவரும் தனக்கு நன்மையைப்பயக்கும் ஸூரியகிரணத்தைத் தடுக்கும்படியான அரக்கனைத் தன்னுடைய அர்க்கியத்தினுல் நாசம்செய்து அந்தக் கிரணத்தின் நன்மையையும்பெற்று இன்புறவேண்டியது அவசியம்.

அர்க்கியப் பிரதானத்தின் கிரமம்.

அர்க்கியத்திற்கு முன்னுல் ஜலத்தில் வியாஹ்ருதி மந்திரத்தினுல் பவித்திரவிரலால் ஒரு யந்திரத்தை எழுதுகிறேம் அல்லவா அதன் தத்வம் யாதெனின்,

दैत्यानां रक्षणार्थाय वेत्रपाख्यो महासुरः ।
शुक्रस्य चाज्ञया तत्र जले तिष्ठति सर्वदा ।
अतस्तस्यापकारार्थं लिखेद्व्याहृतिमन्त्रकम् ॥

தைத்யாநாம் ரக்ஷணார்த்தாய வேத்ரபாக்யோ மஹாஸுர: ।
ஶுக்ரஸ்யாஜ்ஞயா தத்ர ஜலே திஷ்டதி ஸர்வதா ।
அதஸ்தஸ்யாபகாரார்த்தம் லிகேத்வ்யாஹ்ருதிமந்த்ரகம் ॥

"மந்தேஹாள் என்னும் ராக்ஷஸர்களைக் காக்கும்பொருட்டு அஸுரகுருவான சுக்ராசாரியாரின் கட்டளையினுல்

வேத்ரபன் என்ற ஓர் துஷ்ட அஸுரன் அர்க்கியம் விடும் ஜலத்தில் இருந்துகொண்டு வருகிறுன். அவனைத் தொலைப்பதற்காக இந்த யந்திரத்தை நாம் எழுதவேண்டும்.

அர்க்கியம் விடும்போது நமது கட்டைவிரல்களும் சுட்டு விரல்களும் ஸம்பந்தப்படாமல் இருக்கவேண்டும். ஏனென்றால் லிகிதஸ்மிருதியில்

अंगुष्ठतर्जनीयोगः राक्षसी मुद्रिका मता ।
राक्षसीमुद्रिकार्घ्यं तु तत्तोयं रुधिरं भवेत् ॥
तस्मादंगुष्ठसंयोगं परिहृत्य विचक्षणः ।
हस्ताभ्यां जलमादाय गायत्र्याचाभिमन्त्रितम् ॥
रवेरभिमुखस्तिष्ठन् त्रिरूर्ध्वं सन्ध्ययोः क्षिपेत् ॥

அங்குஷ்டதர்ஜநீயோக: ராக்ஷஸீ முத்ரிகா மதா ।
ராக்ஷஸீமுத்ரிகார்க்யம் து தத்தோயம் ருதிரம் பவேத் ॥
தஸ்மாதங்குஷ்டஸம்யோகம் பரிஹ்ருத்ய விசக்ஷண: ।
ஹஸ்தாப்யாம் ஜலமாதாய காயத்ர்யாசாபிமந்த்ரிதம் ॥
ரவேரபிமுகஸ்திஷ்டந் த்ரிரூர்த்வம் ஸந்த்யயோ: க்ஷிபேத் ॥

“சுட்டுவிரலும் கட்டைவிரலும் ஸம்பந்தப்பட்டால் ராக்ஷஸமுத்ரை என்று சொல்லப்படும். அதனால் விடும் அர்க்கியஜலமானது ரக்தமாகி விடுகிறது. ஆகையால் கட்டைவிரல் சுட்டுவிரல் இவைகளின் ஸம்பந்தமன்னியில் இரண்டு கைகளினாலும் ஜலத்தை எடுத்து காயத்ரீயினால் மந்திருத்து ஸூரியனை நோக்கி ஸந்தியா காலங்களில் மூன்று அர்க்கியங்களைக்கொடுக்கவேண்டும்.

சங்கை:— மூன்று அர்க்கியங்கள் ஏன்? இரண்டாவது நான்காவது கூடாதா?

ஸமாதானம்:—

एकं वाहननाशाय द्वितीयं शस्त्रनाशने ।
राक्षसानां वधायैकं दद्यादर्घ्यत्रयं बुधः ॥

ஏகம் வாஹநநாசாய த்விதீயம் சஸ்த்ரநாசநே ।
ராக்ஷஸாநாம் வதாயைகம் தத்யாதர்க்யத்ரயம் புத: ॥

அந்த ராக்ஷஸர்கள் தேர் முதலிய வாஹனங்களில் ஏறிக்கொண்டும் அனேக ஆயுதங்களைக் கையிலேந்திக்கொண்டும் ஸூரியனுடன் போர்புரிவதால் அவர்களின் வாஹனத்தைப்பொடியாக்குவதற்கு ஒரு அர்க்கியமும் ஆயுதங்களை உடைப்பதற்கு ஒரு அர்க்கியமும் அவர்களையே கொல்வதற்கு ஒரு அர்க்கியமும் ஆக மொத்தம் மூன்று அர்க்சியங்களை விடவேண்டும்.

प्रातर्मध्याह्नयोस्तिष्ठन् सायमासीन एव तु ।

ப்ராதர்மத்யாஹ்னயோஸ்திஷ்டந் ஸாயமாஸீந ஏவ து ।

யஜுர்வேதிகள் காலையிலும் மத்தியானத்திலும் நின்றுகொண்டும் மாலையில் உட்கார்ந்துகொண்டும் அர்க்கியம் கொடுக்கவேண்டும்.

तिष्ठन्नर्घ्यत्रयं दद्यात् त्रिषु कालेषु बह्वृचः ॥

திஷ்டந்நர்க்யத்ரயம் தத்யாத் த்ரிஷு காலேஷு பஹ்வ்ருச: ॥

ரிக்வேதிகள் மூன்று காலங்களிலும் மூன்று அர்க்கியங்களையும் நின்றுகொண்டே தரவேண்டும்.

गोशृङ्गमात्रमुद्धृत्य रविं वीक्ष्य जलाञ्जलिम् ।
द्वौ पादौ च समौ कृत्वा पाणिमुद्धृत्य निक्षिपेत् ॥

கோஶ்ருங்கமாத்ரமுத்த்ருத்ய ரவிம் வீக்ஷ்ய ஜலாஞ்ஜலிம் ।
த்வௌ பாதௌ ச ஸமௌ க்ருத்வா பாணிமுத்த்ருத்ய நிக்ஷிபேத் ॥

இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்து நின்றுகொண்டு சூரியனை நோக்கி ஜலத்தைக் கையிலேந்தி பசுவின் கொம்பு அளவு உயரமாகத் தூக்கி அர்க்கியம் கொடுக்கவேண்டும்.

स्थले स्थितो जले दद्यात् सूर्यस्यार्घ्यं विचक्षणः ।
जलस्थः न स्थले दद्यात् जलस्थेन जलेन तु ॥

ஸ்தலே ஸ்திதோ ஜலே தத்யாத் ஸூர்யஸ்யார்க்யம் விசக்ஷண: ।
ஜலஸ்த: ந ஸ்தலே தத்யாத் ஜலஸ்தேந ஜலேந து ॥

பூமியில் நின்று அர்க்கியம் கொடுத்தால் ஜலத்தில் விடவேண்டும். ஜலத்தில் நின்று கொடுத்தால் பூமியில் விடக்கூடாது. அதாவது எப்போதும் அர்க்கியத்தை ஜலத்திலே விடவேண்டும். (ஏனெனில் ஜலம் மிகவும் பரிசுத்தமானதால் பரிசுத்தமானவிடத்தில் அர்க்கியத்தை விடவேண்டும் என்பது தத்வம்.)

அர்க்கியம் விட்ட பிறகு 'அஸாவாதித்யோ என்ற மந்திரத்தால் ஜலத்தைச் சுற்றி ஆசமனம் செய்கிறோமல்லவா! அதன் தத்வம் யாதெனின்,

அந்த ராக்ஷஸர்களின் ஸம்ஹாரத்தால் நமக்குப் பாபம் ஏற்படுகிறது. அதைப் பரிஹாரம் செய்துகொள்வதற்குப் பிராயச்சித்தரூபமாக பூப்பிரதக்ஷிணம் செய்கிறோம். பிறகு ஆசமனம் செய்வதாலும் தைத்யர்களைக்கொன்ற பாபத்தினின்றுவிடுகிறோம்.

प्रायश्चित्तार्थमाचम्य मुच्यते दैत्यहत्यया ।
प्रणवव्याहृतीभिश्च कृत्वात्मानं प्रदक्षिणम् ॥
𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌮𑌾𑌚𑌮𑍍𑌯 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌦𑍈𑌤𑍍𑌯𑌹𑌤𑍍𑌯𑌯𑌾 ।
𑌪𑍍𑌰𑌣𑌵𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍀𑌭𑌿𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍 ॥

ஜபம்:— நாம் ஜபிக்கும் காயத்ரீமந்திரத்தின் மஹிமையைச் சொல்லவியலாது. காயத்ரீ தான் எல்லாவற்றிற்கும் மூலமாயுள்ளது. ஓங்காரத்திற்கு வியாஹ்ருதிவியாக்யானமாயும், வியாஹ்ருதிக்குக் காயத்ரீ வியாக்யானமாயும், காயத்ரீக்கு புருஷஸூக்தம் வியாக்யானமாகவும், அப்புருஷஸூக்தத்திற்கு எல்லா வேதங்களும் வியாக்யானமாகவும் இருந்துவருகின்றன. (அநுவியாக்யானம்) ஸ்ரீ கிருஷ்ணபகவானும் கீதையில்

गायत्री छन्दसामहम् । 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌮𑌹𑌮𑍍 ।

"சந்தஸ்களினிடையே காயத்ரீயினிடம் என் ஸாந்நித்யம் அதிகமாயுள்ளது" என்று கூறியிருக்கிறார் இதற்கு 'ஜபம்' என்று பெயர்வந்த காரணத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே அதன் மஹிமை நன்கு விளங்கும்.

जकारो जन्मविच्छेदः पकारः पापनाशनः ।
तस्माज्जप इति प्रोक्तः जन्मपापविनाशतः ॥
𑌜𑌕𑌾𑌰𑍋 𑌜𑌨𑍍𑌮𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌃 𑌪𑌕𑌾𑌰𑌃 𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌨𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌪 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌜𑌨𑍍𑌮𑌪𑌾𑌪𑌵𑌿𑌨𑌾𑌶𑌤𑌃 ॥

(ஜ=ஜன்மம் அதாவது பிறப்பு, ப=பாபம்.) பிறப்பையும் பாபத்தையும் போக்கடிப்பதால் ஜபம் என்றுபெயர். (அதாவது ஜபத்தினல் பாபங்களிலிருந்து விலகி முக்தியையடைந்து பூமியில் பிறப்பதேயில்லை என்பது தாத்பர்யம்).

गायन्तं त्रायते यस्माद्गायत्रीत्युच्यते बुधैः ।
𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑍈𑌃 ।

இந்த காயத்ரீயானது தன்னை கானம்செய்கிறவனை அதாவது உபாஸிப்பவர்களை முக்தியைக்கொடுத்துக் காப்பாற்றுகிறபடியால் காயத்ரீ என்று பண்டிதர்களால் சொல்லப்படுகிறது.

இந்த காயத்ரீமந்திரமானது ரிக்வேதம் மூன்றும் மண்டலம் அறுபத்திரண்டாம் ஸூக்தம் பத்தாவது ரிக்கில் உள்ளது. இதன் அர்த்தம் ரிக்பாஷ்யத்தில் விஸ்தாரமாக ஸ்ரீமதாசார்யாரால் விளக்கப்பட்டிருக்கிறது.

இதைத் தினந்தோறும் ஆயிரம் முறை ஜபித்தால் உத்தமமானது; நூறுமுறை ஜபித்தால் மத்யமமானது; பத்துமுறை ஜபித்தால் அதமமானது. இன்னொரு பக்ஷமும் உண்டு. ஆயிரத்தெட்டு முறையாவது, நூற்றெட்டுமுறையாவது, இருபத்தெட்டு முறையாவது, பத்துக்குக் குறையாமலாவது ஜபிக்கவேண்டும். இல்லாவிடில் பதிதனுகிருன். இதற்குப் பிரமாணம்

सहस्रपरमां देवीं शतमध्यां दशावराम् ।
गायत्रीं संजपेन्नित्यं यतवाक्कायमानसः ॥
अष्टोत्तरसहस्रं वा शतमष्टोत्तरं तु वा ।
अष्टाविंशद्दशान्यूनं जपेत्तामन्यथा पतेत् ॥

𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌰𑌮𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌶𑌤𑌮𑌧𑍍𑌯𑌾𑌂 𑌦𑌶𑌾𑌵𑌰𑌾𑌮𑍍 ।
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌸𑌞𑍍𑌜𑌪𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌤𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌮𑌾𑌨𑌸𑌃 ॥
𑌅𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌶𑌤𑌮𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।
𑌅𑌷𑍍𑌟𑌾𑌵𑌿𑌂𑌶𑌦𑍍𑌦𑌶𑌾𑌨𑍍𑌯𑍂𑌨𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍𑌤𑌾𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑌤𑍇𑌤𑍍 ॥

இரண்டு பக்ஷங்களிலும் பத்துக்குக்குறையாமல் ஜபிக்கவேண்டும் என்பது திண்ணம்.

दशकृत्वः प्रजप्ता सा त्रियह्नाद्यत्कृतं लघु ।
तत्पापं प्रणुदत्याशु नात्र कार्या विचारणा ॥
शतं जप्ता तु सा देवी पापौघशमना स्मृता ।
सहस्रजप्ता सा देवी ह्युपपातकनाशिनी ॥
कोटिजापेन गायत्र्याः यदिच्छति तदाप्नुयात् ।
यक्षविद्याधरत्वं वा गन्धर्वत्वमथापि वा ॥
देवत्वमथ वा राज्यं भूलोकं चाप्यकण्टकम् ।

𑌦𑌶𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑌜𑌪𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌤𑍍𑌰𑌿𑌯𑌹𑍍𑌨𑌾𑌦𑍍𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌲𑌘𑍁 ।
𑌤𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌣𑍁𑌦𑌤𑍍𑌯𑌾𑌶𑍁 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌵𑌿𑌚𑌾𑌰𑌣𑌾 ॥
𑌶𑌤𑌂 𑌜𑌪𑍍𑌤𑌾 𑌤𑍁 𑌸𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌪𑌾𑌪𑍌𑌘𑌶𑌮𑌨𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌜𑌪𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌹𑍍𑌯𑍁𑌪𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌿𑌨𑍀 ॥
𑌕𑍋𑌟𑌿𑌜𑌾𑌪𑍇𑌨 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌃 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 𑌤𑌦𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ।
𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌤𑍍𑌵𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ॥
𑌦𑍇𑌵𑌤𑍍𑌵𑌮𑌥 𑌵𑌾 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌭𑍂𑌲𑍋𑌕𑌂 𑌚𑌾𑌪𑍍𑌯𑌕𑌣𑍍𑌟𑌕𑌮𑍍 ।

பத்து காயத்ரிஜபம் செய்தால் மூன்று நாட்களில் செய்யப்பட்ட அற்பபாபங்கள் போய்விடும். இதில் ஸந்தேஹமில்லை. நூறு ஜபம் செய்தால் கூட்டங்கூட்டமான பாபத்தைப் போக்கடிக்கும். ஆயிரம் ஜபம்செய்தால் உபபாதகங்கள் நாசமாகின்றன. கோடிஜபம் செய்தால் வித்யாதரப்பதவியோ, கந்தர்வர்களின் பதவியோ, தேவர்களின் பதவியோ, பூலோகத்தில் ஏகாதிபத்யமான ராஜ்யமோ, எதை அடையவிரும்புகிறனோ அதை அடைவான்.

...................... संख्यायैव जपेद्बुधः ।
असंख्यातोऽपवित्रश्च जपो निष्फलतामियात् ॥
...................... 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌯𑍈𑌵 𑌜𑌪𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ।
𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑍋𑌽𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 𑌜𑌪𑍋 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌤𑌾𑌮𑌿𑌯𑌾𑌤𑍍 ॥

ஜபத்தைக் கணக்குடன் எண்ணியே செய்தல்வேண்டும். கணக்கல்லாமற் செய்தால் அசுத்தனுவதுமன்னியில் ஜபமும் நிஷ்பலமாகிவிடும். "ஆற்றில் கொட்டினுலும் அளந்துகொட்டு" (Measure is Treasure) என்று ஆன்றோர் பழமொழியல்லவா?

पर्वभिर्गणयेत्संख्यां नाक्षमालादिभिर्नृप ।
गायत्र्या वेदमूलत्वाद्वेदः पर्वसु गीयते ॥
𑌪𑌰𑍍𑌵𑌭𑌿𑌰𑍍𑌗𑌣𑌯𑍇𑌤𑍍𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌂 𑌨𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑍃𑌪 ।
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌵𑍇𑌦𑌮𑍂𑌲𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌃 𑌪𑌰𑍍𑌵𑌸𑍁 𑌗𑍀𑌯𑌤𑍇 ॥

இதர ஜபங்களை ஜபமாலை, அக்ஷமாலை முதலியவைகளைக்கொண்டு ஜபிக்கலாம். காயத்ரீயைமாத்திரம் விரல்களின் பர்வாக்களால் தான் கணக்கிடவேண்டும்.

आरभ्यानामिकामध्यपर्वप्रादक्षिणक्रमात् ।
तर्जनीमूलपर्यन्तं संख्याय त्रिपदीं जपेत् ॥
मध्यपर्वद्वये मेरुः तं मेरुं नातिलंघयेत् ।
𑌆𑌰𑌭𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌪𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌮𑍂𑌲𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌯 𑌤𑍍𑌰𑌿𑌪𑌦𑍀𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍 ॥
𑌮𑌧𑍍𑌯𑌪𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌯𑍇 𑌮𑍇𑌰𑍁𑌃 𑌤𑌂 𑌮𑍇𑌰𑍁𑌂 𑌨𑌾𑌤𑌿𑌲𑌂𑌘𑌯𑍇𑌤𑍍 ।

பவித்திரவிரலில் மத்தியிலுள்ள பர்வம்முதல் ஆரம்பித்து தர்ஜனீவிரலின் அடியிலுள்ள பர்வம்வரையில் (பத்தாக) கணக்கிட்டு காயத்ரீயை ஜபிக்கவேண்டும். நடுவிரலின் மத்தியிலுள்ள இரண்டு பர்வங்களிலும் மேருபர்வதம் உளது. அதை நாம் அதிக்கிரமிக்கலாகாது.

गायत्रीं तु परित्यज्य योऽन्यमन्त्रमुपासते ।
मण्डूकरावास्ते ज्ञेयाः इति वेदविदो विदुः ॥

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌤𑍁 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌰𑌾𑌵𑌾𑌸𑍍𑌤𑍇 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

இவ்வித காயத்ரீமந்திரத்தைவிட்டு வேறு மந்திரங்களை உபாஸித்தால் அவைகளை உச்சரிக்கும்பொழுது உண்டாகும் சப்தமானது மழைகாலத்தில் கத்தும் தவளைகளின் சத்தத்துக்கு ஒப்பாகும் என்று வேதமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

एकाहं जपहीनश्च सन्ध्याहीनो दिनत्रये ।
द्वादशाहमनग्निश्च शूद्र एव न संशयः ॥

𑌏𑌕𑌾𑌹𑌂 𑌜𑌪𑌹𑍀𑌨𑌶𑍍𑌚 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋 𑌦𑌿𑌨𑌤𑍍𑌰𑌯𑍇 ।
𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌮𑌨𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰 𑌏𑌵 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

ஒருநாள் ஜபம் செய்யாவிட்டாலும், மூன்றுநாள் தொடர்ந்தாற்போல் ஸந்தியாவந்தனம் செய்யாவிட்டாலும், பன்னிரண்டுநாள் சேர்ந்தாற்போல் ஔபாஸனம் செய்யாவிட்டாலும் சூத்திரனாகிறான். இதில் ஸந்தேஹமில்லை.

மேலும் ஜபத்தைச் செய்யுங்கால் உதடுகள்கூட அசையாமலும், பிறர் காதுகளுக்கு எட்டாமலும், மிகவும் ரஹஸ்யமாகச் செய்யவேண்டும். எதுவும் ரஹஸ்யமாகச் செய்தால்தான் அதிகப் பலனுண்டு. விதைகளைப் புதைத்து ரஹஸ்யமாக பூமியில் மூடி வைக்காமலிருந்தால் அது மரமாக முளைக்குமோ? அதனால்தான் ஒவ்வொரு உபதேசத்தின் முடிவிலும்

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।

𑌇𑌤𑌿 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌯𑌾𑌨𑌘 ।

'இப்பேர்ப்பட்ட மிகவும் ரஹஸ்யமான சாஸ்திரத்தை உனக்கு உபதேசித்திருக்கிறேன்' என்று முடிவுரையாகக் கூறப்படுகிறதல்லவா? இதை ரஹஸ்யமாக உச்சரிக்கவேண்டும் என்பதுமாத்திரமல்ல. அயோக்யர்களுக்கும் உபதேசம் செய்யலாகாது. அப்படியிருக்க இதில் அதிகாரமில்லாதவர்கள் ஜபிக்கலாகாது என்று சொல்லுதலும் வேண்டுமா? எப்படி தாசில்தார், என்ற அதிகாரம்

இருந்தால்தான் தாசில்தாரின் பவர்களைச் செலுத்தப் பிரயோஜனப்படுமோ, அப்படியே பிராம்மண்யம் என்ற அதிகாரம் பெற்றிருந்தால்தான் காயத்ரீஜபத்தின் பவர் பிரயோஜனமாகும். தற்காலத்தில் எல்லாருக்கும் ஈசுவரன் வாயைக் கொடுத்திருக்கிறுன். எல்லாரும் எல்லாவற்றையும் உச்சரிக்கலாம். பிராம்மணர்தான் உச்சரிக்வேண்டும் என்பது பார்ப்பனர்களின் சூழ்ச்சியேதவிர வேறல்ல என்று பலர் கூக்குரலிடுகிருர்கள். அது மிகவும் தப்பான அபிப்பிராயமென்றும், எல்லாம் வல்ல இறைவனின் ஆக்ஞையைக கடைப்பிடித்தே எல்லாரும் ஒழுகவேண்டும் என்பதை ஒரு சிறு கதையால் விளக்குவோம்.

ஓர் ஊரில் பிராம்மணால்லாத ஒரு ஜமீன்தார் இருந்தார். அவருடைய ஹெட்குமாஸ்தா தினந்தோறும் ஆபீஸுக்கு நேரம் கழித்து வருவதைக் கவனித்து நேரமானதின் காரணத்தை வினவினுர். காயத்ரீஜபம் செய்துவிட்டு வருகிறபடியால் நேரமாகிறதென்றும் அதற்காக மன்னிக்கும்படிக்கும் குமாஸ்தா தெரிவித்துக்கொண்டார். உடனே ஜமீன்தார் "அப்பேர்ப்பட்ட காயத்ரீயைச் சொல்லும் நாமும் கெட்போம்" எனவே குமாஸ்தா "ஐயா! அதை மூன்று வர்ணத்தார் தான் உச்சரிக்கலாம். தங்களுக்குச் சொல்லும் பக்ஷத்தில் சுருதியை மீறி நடந்ததாகும், ஆகையால் தயவு செய்து மன்னிக்கவேண்டும் என்றுர்.ஜமின்தார் ஈசுவரன் எல்லாருக்கும் வாயைத்தந்திருக்கிறுன். நீர சொல்வது மிகவும் விந்தையாயிருக்கிறது. நாளையதினத்திற்குள் இவ்விஷயத்தை நமது பிரஜைகளுக்கு எதிரில் திருப்திகரமாய் நிரூபணம் செய்துகாட்டாவிடில் உத்யோகபதவியிருந்து விலகவேண்டும்" என்று உத்திரவிட்டார். என்ன செய்வார் காயத்ரீஜபம் செய்துவரும் பிராம்மணன்! மறுநாள் பெரியதர்பார் ஏற்படுத்தப்பட்டது. ஜமீன்தாரரின் குடிகள் திரள்திரளாகக் கூடியிருந்தனர். ஜமீன்தாரும் தமது ஆஸனத்தில் அமர்ந்தனர். குமாஸ்தாவும்

गायन्तं त्रायते यस्माद्गायत्रीत्युच्यते बुधैः ।

காயந்தம் த்ராயதே யஸ்மாத்காயத்ரீத்யுச்யதே புதை: ।

தன்னைக் கானம்செய்பவர்களைக் காத்தருள்வதால்தான் காயத்ரீ என்று பெயர். ஆகையால் காயத்ரீதேவி தன் நாமதேயத்திற் கேற்றபடி நம்மைக் காப்பாற்றுவாள்' என்று நம்பி தர்பாருக்கு

வந்தார். ஜமீன்தாருக்கு அருகில் கைகட்டி வாய்பொத்தி நிற்கும் சேவகனைக்கூப்பிட்டு, ஜமீன்தாரைத் தன் விரலால சுட்டிக்காட்டி "அடே! இவரைப்பிடித்து வெளியே தள்ளு" என்று சொன்னார். அச்சேவகன் குமாஸ்தாவின் வார்த்தையைக்கொண்டு ஜமீன் தாரை அவ்வாறு செய்வானா? குமாஸ்தா பலதடவை அப்படிச் சொல்லியும் அவன் சும்மாவிருப்பதைக்கண்டு ஜனங்களை நோக்கி "இச்சேவகனிடம் நான் சொன்னதைமாத்திரம குறித்துக்கொள் ளுங்கள்" என்றார். இத்தருணத்தில் குமாஸ்தா தன் விஷயத்தை நிரூபணம் செய்யவில்லையென்று ஜமீன்தார் கோபித்துத் தன் சேவகனைக் கூப்பிட்டு, குமாஸ்தாவைச் சுட்டிக்காட்டி 'அடே! இவரைப்பிடித்து வெளியே தள்ளு' என்றார். இந்த வார்த்தை அவர் உதடுகளிலிருந்து வெளிவந்தவுடனே அச்சேவகன் குமாஸ் தாவை வெளியே தள்ளச்சென்றான். உடனே குமாஸ்தா ஜனங் களைப் பார்த்து ஜமீன்தார் சேவகனிடம் சொன்னதைக் குறிக்கச் சொன்னார். பிறகு ஜமீன்தாரிடம் விடைபெற்றுக்கொண்டு சொன்னதாவது,'ஐயாநான் தங்கள்கட்டளையை இதோநிரூபித்து விட்டேன். 'அடே! இவரைப்பிடித்து வெளியே தள்ளு' என்ற ஒரே வாக்யமானது என் வாயிலிருந்து வந்தபோது இச்சேவகன் அம்மாதிரி செய்யாதபடியால் அது வீண் ஆயிற்று, அதே வாக் யம் தங்கள் வாயிலிருந்து வந்தவுடன் அவன் என்னைப்பிடித்துத் தள்ள வந்துவிட்டான் ஏன்? ஜமீன்தார என்ற அதிகாரம் என் னிடம் இல்லையாதலால் அது பலிக்கவில்லை, அதுபோல் பிராம் மண்யம என்ற அதிகாரம் தங்களிடம் இல்லையாதலால் காயத்ரீ வீணே ஆகும் என்பதற்கையமில்லை.' உடனே எல்லாரும் கர கோஷம் செய்தனர். ஜமீன்தாரும் உண்மையையுணர்ந்து மிக வும் ஸந்தோஷமடைந்து அக்குமாஸ்தாபதவியில் அவரை ஸ்திர மாகச்செய்து சிறந்த வெகுமதியையும் தந்தார்.

முற்கூறியபடி ஜபம் செய்தபிறகு உபஸ்தானம்செய்து திக் தேவதைகளுக்கும் பிரதக்ஷிணநமஸ்காரங்களைச் செய்து அவர்கள் நம்மைக்குறித்து 'நீ க்ஷேமமாய் இருக்கக்கடவது' என்று ஆசீர் வாதம் செய்வதற்காக நம் கோத்ரம் முதலியவைகளைத் தெரி வித்துக்கொண்டு (அபிவாதனம் செய்து) பிறகு எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்.

சங்கை:— 'சுருதிகளில் உதயமாகும்போதும், அஸ்தமிக்கும்போதும் ஸூரியனை உபாஸிக்கவேண்டும் (ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும்)' என்றே கூறப்பட்டிருப்பதாலும் மத்யானத்தில் செய்யவேண்டும் என்பதற்கு சுருதியில்லையாதலாலும் மாத்யான்ஹிகம் எப்படி அனுஷ்டானத்தில் உளது?

ஸமாதானம்:—

अनन्ता वै वेदाः । 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌃 ।

என்று வேதங்கள் எண்ணிறந்தவை. அவையாவற்றையும் எவரால்தான் அறியமுடியும்? எப்போது மாத்யான்ஹிகம் சிஷ்டர்களால் தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டுவருகிறதோ அதைக்கொண்டு அவ்விஷயமாகச் சுருதி இருந்தே தீரவேண்டும் என்று நாம் ஊகித்தறியவேண்டும். மேலும் ஸ்மிருதிகாரர்கள் சுருதியில் சொல்லப்படாததை ஸ்மிருதிகளில் கூறமாட்டார்கள். அவ்விஷயத்தில் ஸ்மிருதி என்ற பெயரே ஸாக்ஷியாகவிருக்கிறது. 'ஸ்மிருதி' என்பதற்கு ஞாபகம் என்று பொருள். நாம் முன்பின் பார்க்காத விஷயமாக நமக்கு ஞாபகம் வருமா? ஆகையால்

मौञ्जीबन्धनमारभ्य सायं प्रातश्च कालयोः ।
मध्याह्नेऽपि च कर्तव्यं यावत्प्राणविमोक्षणम् ॥
सन्ध्यात्रयं न कर्तव्यं यावन्मौञ्जी न बध्यते ।
सन्ध्यात्रयं तु कर्तव्यं सायमादि ततःपरम् ॥

𑌮𑍌𑌞𑍍𑌜𑍀𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌸𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑌯𑍋𑌃 ।
𑌮𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑍇𑌽𑌪𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥
𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑌯𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌮𑍌𑌞𑍍𑌜𑍀 𑌨 𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑌾𑌯𑌮𑌾𑌦𑌿 𑌤𑌤𑌃𑌪𑌰𑌮𑍍 ॥

பிராதஹ்காலத்திலும், ஸாயங்காலத்திலும், மத்யான்ஹத்திலும் கூட ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும். உபநயனமானவுடன் 'மூன்றுமுறை ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும்' என்று ஸ்மிருதிகளில் எப்போது மூன்றுமுறை ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதோ அதனால் அவ்விஷயமாக ஓர் சுருதி இருக்கவேண்டும் என்று அறியவேண்டும்.

மாத்யான்ஹிகத்தில் அர்க்கியப்பிரதானம்:— மந்தேஹாள் என்ற அஸுரர்கள் ஸந்திகாலங்களில்தான் ஸூரியகதியைத்

தடைசெய்கிறார்கள். மத்யான்ஹத்தில் அவர்கள் அம்மாதிரி செய்கிறதில்லை. ஆகையால் மத்யானத்தில் அவர்களை நிக்ரஹம் செய்யவேண்டிய அவசியமில்லை. அதனால் ஒரேதடவைதான் அர்க்கியம் விடுகிறோம், மூன்றுமுறையல்ல. ஆனால் காயத்ரீமந்திரத்தினால் இரண்டுமுறை மத்யான்ஹத்திலும் அர்க்யம் கொடுப்பது ஸூர்யாந்தர்கத பகவானுக்கு அர்க்யத்தை உபலக்ஷணையாகக்கொண்டு ஷோடசோபசாரரூபமேயாகும்.

**முடிவுரை:—** இவ்வாறு முக்கிய விஷயங்களாகக் கருதப் பட்டவைமாத்திரம் மேலே விபாமாய்க் கூறப்பட்டன. மந்திரங்களின் அர்த்தம் முதலியவைகளை மற்றுமோர் முறை எழுதுவோம். எல்லா வைதிகசிரோமணிகளும் ஸந்தியாத்ரயங்களைக் கடைப்பிடித்தொழுகி தீர்க்காயுளையும், பிரம்மவர்ச்சஸ்ஸையும் ஈசுவரானுக்ரஹத்தையும் பெற்று ஸுகமாய் இருப்பார்களாக.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 5 | வந்தியஸ்திரீ | மலடி |
| 23 | 12 | காரணாலும் | காரணத்தாலும் |
| 27 | 32 | அருண | அருணம் |
| 29 | 18 | ா·க்ஷஸர் | ராக்ஷஸர் |
| 32 | 18 | மந்திருத்து | மந்திரித்து |
| | 32 | ஆர்க்சியங்களை | அர்க்கியங்களை |
| 33 | 31 | விடுகிறோம் | விடுபடுகிறோம் |
| 38 | 17 | கெட்போம் | கேட்போம் |
| | 20 | ஜமீன்தாா | ஜமீன்தார் |
| | 24 | உத்யோகபதவியிருந்து] | உத்யோகப்பதவியிலிருந்து |

33ம் பக்கத் தொடர்ச்சி:— ஜலம் கிடைக்காவிட்டாலும் பிரயாணத்திலிருக்கும்போதும், அடைபட்டிருக்கும்போதும், அசௌசம் நேரிட்டபோதும்கூட மண்புழுதியினாலாவது அர்க்கியம் கொடுக்கவேண்டும். (ஸ்மிருதி முக்தாபலம்) ஊரெங்கும் பஞ்சமாயும், மகா ஆபத்து நேரிட்டும், மார்ஜனம் அர்க்கியம் முதலியவைகளுக்கு அசௌகரியம் ஏற்பட்டும் இருக்கும்போதுகூட மந்திரத்தினால் சூரியோபஸ்தானமாவது செய்யப் படவேண்டும்

**குறிப்பு:—** இவ்விஷயம் புதுக்கோட்டை தஸராபண்டிதபரீக்ஷை போர்டாரின் ஆதரவில் பிரபவ-ஹூ நவராத்திரியில் உபந்யாஸம் செய்யப்பட்டது. ஆர்யதர்மம் பத்திரிகையில் [illegible] வெளிவந்தது.

5*